சுகங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

ர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 15 வியாழக்கிழமை (01-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர்:340

# விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வந்தால் தடை நீக்கம் குறித்துப் பரிசீலிக்கலாம்!



## ஜனாதிபதி இன்று நாடு திரும்புவார்

கொழும்பு,நவ.1

மூன்று நாள் விஜயமாக லண்டன் புறப்பட்டுச் சென்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று காலை நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவர் நாடு திரும்பியதும் பொ.ஐ. முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு அநுராதபுரத்தில் ஆரம்பமாகும்.

கூட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதியும், கட்சியின் ஏனைய தலைவர்களும் ஸ்ரீ மகா போதி அருகே வழிபாட்டில் ஈடுபடுவார்கள். (ம)

## ஜனாதிபதிக்கு எதிராகப் பீரிஸ் வழக்குத் தாக்கல்

கொழும்பு,நவ.1

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவர் றியன்ஸி அரச குலரட்ண பதவி நீக்கம் செய்யப்பட்டது சட்ட விரோதமானது எனத் தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.(ம-7-3)

## இரு சிப்பாய்கள் காயம்

யாழ்ப்பாணம்,நவ.1

நாகர்கோயில் பகுதியில் உள்ள படையினரின் முன்னணி நிலைகள் மீது விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாயன்று முற்பகல் 11.30 மணியளவில் 81.எம்.எம்ரக மோட்டார்களை பயன்படுத்தித் தாக்குதல் நடத்தினர் என்றும் -

இந்தத் தாக்குதலில் சிப்பாய்கள் இருவர் காயமடைந்தனர் என்றும் - விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

காயமடைந்த சிப்பாய்கள் பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் - அது மேலும் தெரிவித்துள்ளது. (ம-4)

## தற்கொலையாளியின் இலக்கு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸாம்!

நாரஹென்பிட்டியில் கடந்த திங்கள்ன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியதாகக் கருதப்படும் குண்டுதாரியின் இலக்கு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் என்று இது தொடர்பாக விசாரணை நடத்திவரும் பொலீஸார் தெரிவித்தனர். (ம)

## பி.பி.ஸி. பேட்டியில் சந்திரிகா தெரிவிப்பு

லண்டன், நவம்பர் 01

**"அரசுடன் சமாதானப் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் முன்வந்தால் அவர்கள் மீதான தடையை நீக்குவது குறித்துப் பரிசீலிக்கலாம்."**

**- இவ்வாறு லண்டனில் பி.பி.ஸி. உலக சேவையின் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கின்றார்.**

அவரது பேட்டி பி.பி.ஸியில் 'ஏஸியா ருடே' நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் ஒளிபரப்பானது. அதில் ஜனாதிபதி கூறியதாவது:-

"புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என்று கோரிக்கையோ நிபந்தனைகளோ நாங்கள் முன்வைக்கவில்லை.

நாங்கள் புலிகளிடம் கேட்பதெல்லாம் பேச்சுக்கு வாருங்கள் என்பது மட்டுமே.

பேச்சுமேசைக்கு முதலில் வாருங்கள். அங்கு கோரிக்கைகள் தொடர்பாக ஆராயலாம் என்றுதான் நாம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நீர்கொழும்புப் பகுதியில் தற்கொலை அங்கி மீட்பு

கொழும்பு,நவ.1

நீர்கொழும்புப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலின்போது தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தும் அங்கி ஒன்று மீட்கப்பட்டதாகப் பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

நேற்றுமுன்தினம் நாரஹென்பிட்டியில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் பொலீஸார் நீர்கொழும்புப் பகுதியில் தேடுதல் நடத்தியதாகவும் -

இப்பகுதியில் மேலும் பல தற்கொலையாளிகளின் அங்கிகள் ஒளித்து வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிப்பதாகப் பொலீஸார் கூறியதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ம-4)

### எண்ணெய்க் கப்பல் மீதான தாக்குதல்:

## கடற்படையினர் மூவரின் கருகிய சடலங்கள் மீட்பு!

யாழ்ப்பாணம்,நவ.1

பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று முன்தினம் படையினரின் எரிபொருள் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த கடற்படையினர் மூவரின் சடலங்கள் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன.

படையினரால் இனங்காணப்பட்ட இந்த மூன்று சடலங்களையும் மல்லாகம் மாவட்ட நீதிவான் பா.சுப்பிரமணியம் நேற்று அங்கு சென்று பார்வையிட்டார்.

கருகி உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட அந்தச் சடலங்களைக் கொழும்புக்கு அனுப்பிப் பிரேத பரிசோதனையின் பின் உறவினரிடம் கையளிக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

மரண விசாரணை வெள்ளியன்று மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெறும்.

இச்சம்பவத்தில் எட்டு படையினர் காயமடைந்துள்ளதாகப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## தாக்கப்பட்ட எண்ணெய்க் கப்பல் காங்கேசனுக்கு இழுத்து வரப்பட்டதாம்

யாழ்ப்பாணம்,நவ.1

பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான 'எம.ா.துன்கிந்த' என்ற எரிபொருள் தாங்கிக் கப்பல் நேற்று காங்கேசன் துறைக்குக் கொண்டுவரப்பட்டதாகப் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இந்தக் கப்பல் மீதான தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் நான்கு படகுகளைப் பயன்படுத்தினர் என்றும் -

படுகாயமடைந்த நிலையில் பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த 9 படையினரில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்றும் -

படைத்தரப்பு அறிவித்துள்ளது. (ம-7)

## அம்பாறையில் கிளைமோர் தாக்குதல்!

அம்பாறை,நவ.1

அம்பாறை மாவட்டம், மல்வத்த - காரைதீவு வீதியில் நேற்றுப்பிற்பகல் 12.30 மணியளவில் கிளைமோர் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

எனினும் இந்தத் தாக்குதலினால் எவ்விதசேதமும் ஏற்படவில்லை.

இதேவேளை -

மேற்படி வீதியூடாகப் பயணம் செய்த விசேட அதிரடிப்படையின் முக்கிய அதிகாரி ஒருவரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் -

எனினும் சம்பந்தப்பட்ட வாகனம் குறித்த இடத்தைக் கடந்த பின்னரே கிளைமோர் வெடித்ததாகவும் -

தகவல்கள் தெரிவித்தன. (ம-7-3)

## ஹங்குரங்கெட்டவில் கிரனேட்டுக்கள் மீட்பு!

கொழும்பு,நவ.1

ஹங்குரங்கெட்ட பகுதியிலுள்ள மரமொன்றின் கீழ் இருந்து நேற்று மூன்று கிரனேட்டுக்களை மீட்டுள்ளனர்.

வாகன சாரதி ஒருவர் கொடுத்த தகவலை அடுத்தே இந்தக் கிரனேட்டுக்கள் மீட்கப்பட்டன என்று ஹங்குரகெட்ட பொலீஸார் அறிவித்துள்ளனர்.

கிரனேட்டுக்கள் மீட்கப்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் நடமாடிய சிப்பாய் ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் தாம் கைதுசெய்துள்ளதாகவும் -

அவர் இக்கிரனேட்டுகளை எடுத்து வந்தாரா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டுவருவதாகவும் -

பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## ஐ.தே.கவுடன் தமிழ்க் கூட்டமைப்புக்கு இரகசிய ஒப்பந்தம் எதுவும் இல்லை!

### அதன் தலைவர்கள் நால்வரும் கூறுகின்றனர்

கொழும்பு,நவ.1

ஐ.தே.கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியுடன் எந்த விதமான புரிந்துணர்வு உடன்படிக்கையோ, இரகசிய ஒப்பந்தமோ செய்து கொள்ளவில்லை என்று நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் இரா.சம்பந்தன், தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமரகுருபரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) பொதுச் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரே இதனைத் தெரிவித்துள்ளனர்.

ஐ.தே.முன்னணியுடன் நாம் ஒப்பந்தம் செய்ததாகக் கூறுவது பொ.ஐ.முன்னணியின் பொய்ப் பிரசாரம் என்றும் அவர்கள் கூறினர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இரு பிரதான சிங்கள தேசியக் கட்சிகளும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லை. எதிர்காலத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக் கருதி கொழும்பில் இராணுவ நிழல் சிவில் நிர்வாகம்?

தலைநகர் கொழும்பில் அதிகரித்துள்ள புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்காகவும், தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் இராணுவப் பாதுகாப்பு அதிகரிக்கப்படவுள்ளது.

பொலீஸ் சேவையை மட்டுப்படுத்தி, இராணுவ நிழல் சிவில் நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்துப் பாதுகாப்பு வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற

### உயர் மட்டக் கூட்டத்தில் ஆராய்வு

பாதுகாப்பு அதிகாரிகளின் உயர்மட்டக் கூட்டத்தில் இது குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது. இந்தக் கூட்டத்தில் முப்படைத் தளபதிகளும் கலந்துகொண்டனர்.

இரு பிரதான தேசியக் கட்சிகளிலும் உள்ள முக்கிய பிரமுகர்களுக்கு தற்கொலைத் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்புக் கொடுப்பது குறித்து இக்கூட்டத்தில் முக்கியமாகப் பரிசீலிக்கப்பட்டது.

எனினும் கொழும்பில் முழுமையான இராணுவ ரீதியிலான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதை பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு விரும்பவில்லை எனக் கூறப்படுகின்றது. நேற்றைய உயர்மட்டப் பாதுகாப்புக் கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மகேஸ்வரனுக்கு ஈ.பி.டி.பி. பதிலடி!

யாழ்ப்பாணம்,நவ.1

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் நேற்று முன்தினம் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி குறித்து வெளியிட்ட கருத்துகளுக்கு பதிலளிக்கும் வகையில் அக்கட்சியின் சார்பில் அறிக்கை ஒன்று நேற்று அனுப்பி வைக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசியல் பொது வாழ்வு என்பது வியாபாரம் அல்ல; அர்ப்பணிப்புடன் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக பாடுபடுவது என்பது மொத்த வியாபாரம் அல்ல. ஈ.பி.டி.பியினராகிய நாங்கள் பட்டங்கள், பதவிகள் பெற்றுக்கொண்ட பின்னர் அரசியலில் ஈடுபட்டவர்கள் அல்லர்.

- யாழ்ப்பாண மாவட்டத்தின் ஐ.தே.கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான தி.மகேஸ்வரன் அவர்களுக்கு இது தெரியாததல்ல. எனினும் தமது வர்த்தக சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்திக் கொள்வதற்காக, அரசியலில் ஈடுபாடுகொண்ட அவர் பதவியைத் தக்க வைப்பதற்கான வாக்கு வேட்டையில் எங்கள் மீது மாசு கற்பிக்க முயல்வது விஷமத்தனமானது.

ஈ.பி.டி.பியை ஸ்ரீதர் திரையரங்கில் இருந்து அகற்றவேண்டும் என்பதற்காகத்தான் தேர்தலில் போட்டியிடுவது போல அவர் கருத்துத் தெரிவித்திருப்பது நகைப்பிற்கு இடமானது. ஏனெனில் ஈ.பி.டி.பியின் ஆதரவுத் தளம் என்பது ஸ்ரீதர் திரையரங்கம் அல்ல. மாறாக மக்களின் மன அரங்கில்தான் ஈ.பி.டி.பி. முகாம் அமைத்துள்ளது. மக்கள் முகத்தில் மலரும் புன்னகைதான் ஈ.பி.டி.பியின் பாதுகாப்பு அரண்கள். மக்கள் வாயார வாழ்த்தும் வாய்மொழிகள்தான் ஈ.பி.டி.பியின் கேடயங்கள். மக்கள் உள்ளந்தான் ஈ.பி.டி.பியின் சிம்மாசனம்.

இது மகேஸ்வரன் போன்ற அரசியல் அரங்கத்தின் புது வரவுகள் தெரிந்துகொள்ளவேண்டிய பாடங்கள் ஆகும். ஆனால் கள்ளக் கையெழுத்துப்போட்டு பணம் சம்பாதிக்கும் கனவான்களுக்குப் பாடம் கற்க நேரமிருப்பதில்லை. சோடாப் போத்தல்களில் திருட்டுத்தனமாக எரிபொருள் கடத்தி, கொள்ளை லாபம் சம்பாதித்து பிரமுகர்களானவர்களுக்கு பாடம் படிக்க அவகாசம் இருப்பதில்லை. மக்கள் சோற்றுக்கும், துணிக்கும் அல்லாடிக்கொண்டிருந்த வேளையில், சாராயம் இறக்குமதி செய்த பெரும்புள்ளிக்கு மக்களின் தேவைகள் பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை.

கடந்துபோன காலங்கள் பற்றி நினைப்பூட்டும் மகேஸ்வரன்களுக்கு ஐ.தே.கவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு எத்தகைய வாழ்வு கிட்டியது என்பது மறந்து போய் இருக்கலாம். ஆனால் மக்களுக்கு அது தெரியாததல்ல. ஐ.தே. கட்சி ஆட்சிக்கு வந்தால் ஈ.பி.டி.பிக்கு அதிகாரத்தில் பங்கு கிடைக்காது என்று அடித்துக்கூறும் மகேஸ்வரன், யாழ்ப்பாணத்தில் போட்டிபோடுவதற்குக்கூட சிரமப்பட நேரிட்டது என்பது மறந்துபோய் இருப்பது விந்தையானது.

ஈ.பி.டி.பியையும் அதன் செயற்பாடுகளையும் விமர்சிக்கும் சுதந்திரத்தைக்கூட பெற்றுக்கொடுத்திருப்பது ஈ.பி.டி.பிதான். பொங்கும் தமிழாகி நின்றுகொண்ட வீரம் பற்றியும் மகேஸ்வரன் பிரஸ்தாபித்துள்ளார். இதே மகேஸ்வரன் அங்கம் வகிக்கும் ஐ.தே.கட்சிதான் ஆஸ்திரேலியாவில் தூதுவராக இருக்கும் முன்னாள் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவுக்குப் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு வழங்க வாக்குறுதி அளித்துள்ளது என்பதும், இந்த மேஜர் ஜெனரல் பொறுப்பாக இருந்தபோதே செம்மணியில் புதைகுழிகள் தோண்டப்பட்டதாக குற்றச்சாட்டுககள் கூறப்படுவதும் தமிழ் பேசும் மக்கள் நினைவில் கொள்ளவேண்டிய விடயங்களாகும். (உ-9)

# சீருடையினரால் தாக்கப்பட்டவர் 15 நாள்களின் பின் ஆஸ்பத்திரியில்

சீருடையினரால் கைது செய்யப்பட்டு நையப்புடைக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒருவர் 15 நாள்களின் பின்னர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து சண்டிலிப்பாயில் வசித்து வரும் ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாயில் சுமார் 15 நாள்களுக்கு முன்னர் சீருடையினரால் துரத்திச் செல்லப்பட்ட ஒருவர் இவர் இருந்த வளவினூடாகத் தப்பிச் சென்றதாகவும் -

அதனையடுத்து இவரைக் கைது செய்து கொண்டுசென்ற சீருடையினர் இவரை நையப்புடைத்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அடித்த காயங்களுக்கு சிகி பெறுவதற்காக எங்கும் செ கூடாது. இது குறித்து யா எதுவும் சொல்லக்கூடாது எச்சரிக்கையுடன் சில தின குப் பின்னர் அவர் விடுவிக்க தாகவும் கூறப்பட்டது.

இதனால் பீதியுற்ற அவர் க 15 நாள்களாக எங்கும் சிகிச்ை குச் செல்லாமல் இருந்துள்ளார். எ னும் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட வ அதிகரித்ததை அடுத்தும் இரத் வாந்தி எடுத்ததைத் தொடர்ந்து அவரது உறவினர்கள் அவரை நேற் முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். (ம-15

# எதிர்வரும் தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டியது அவசியம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.1

எதிர்வரும் தேர்தலில் ஏனோ தானோ என்றில்லாமல் அனைத்து வாக்காளர்களும் வாக்களிக்க வேண்டும் இதன் மூலமே தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப் பெறமுடியும். அத்துடன் கள்ளவாக்குப் போடுவதையும் தடுக்க முடியும்.

- இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) பொதுச் செயலாளர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தாம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

'தமிழ் மக்களுக்கோர் அறை கூவல்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டுவிட்டன. வடக்குக் கிழக்கில் சிங்கள இனவாதக் கட்சிகள் உட்பட அரசுடன் செயற்படும் தமிழ்க் குழுக்களும் தேர்தல் களத்தில் குதித்துள்ளன. இது தவிர தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையிலான நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பும் இத்தேர்தலில் போட்டியிடுகின்றது.

இக்கூட்டமைப்பு தனது அடிப்படைக் கொள்கைகளை வெளியிட்டுள்ளது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, யுத்தநிறுத்தம், மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை இவையே அந்த முக்கிய விடயங்களாகும்.

தமிழ்மக்களின் பிரதிநிதித்துவம், சிதறுப்படாமல் வலுவாக இருந்தால் மட்டுமே இக்கோரிக்கைகள் தொடர்பாக, வரக்கூடிய எந்தவொரு அரசுக்கும் தமிழ்க் கட்சிகள் அழுத்தங்களைப் பிரயோகிக்கமுடியும். அமைச்சராவதாலோ அன்றி அரச படைகளுடன் இணைந்து செயற்படுவதாலோ இக்கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாது.

ஆனால், தமிழ்க் கட்சிகளின் வாக்குகளைப் பெற்று அமைச்சர்களானோரும், அரச படைகளுடன் செயற்படுவதால் இலட்சக் கணக்கில் பணம் பெறுவோரும் தமது சுயநல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள, மீண்டும் தேர்தல் களத்துக்கு வந்துள்ளனர். தேர்தலில் வலுவான தமிழ் பிரதிநிதித்துவக் குழுவொன்றை உருவாக்குவதைவிட, தமிழ்க் கூட்டமைப்பு மீது சேறடிப்பதும், வாக்குகளைச் சிதறடிப்பதுமே இவர்களது முக்கிய நோக்கமாகும்.

ஒருபுக்க யுத்தத்துக்கு ஆதரவு; மறுபக்கம் யுத்த அவலங்களால் பாதிக்கப்படுவோருக்குப் பி இதற்குப் பெயர் மக்கள் சேவை றும் கூறப்படுகிறது.

அரசும், வெளிநாடுகளும் தமி மக்களின் உயிர் வாழ்விற்காக ஒது கும் பணத்தைப் பிரித்து விநியோ கிக்கும் ஓர் அமைச்சர். பின்னர் அ படி விநியோகித்தமைக்கு நாளாந் தம் நன்றிநவிலல், விளம்பரங்கள். இறுதியில் 'நன்றி மறப்பது நன்றன்று' என மக்களுக்கு அன்பான எச்சரிக்கை வேறு. இவ்வாறான கபட வேடதாரி களை மக்கள் புரிந்துகொள்ள வேண் டும்.

இன்று கோயில்கள், வாசிகசான கள், என்பவற்றைப் புனரமைக்கவெ அரசின் பணத்தை ஒதுக்கலாம் ஆனால் யுத்தம் நிறுத்தப்பட்டாலேயே முழு அபிவிருத்தி சாத்தியமாகும் யுத்த விமானங்களும், பல்குழல் பீரங்கிகளும் இன்னும் முழங்கிய வாறே உள்ளன. அவை எங்கு, எப் பொழுது குண்டுமாரி பொழியுமென யாருக்கும் தெரியாது. எனவே அர சின் பணத்தைக் கொடுத்து மக்களை ஏமாற்றி வாக்குப் பெற்றுவிடலாம், என்ற ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புக் களின் பொய்த் தோற்றங்களை மக் கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த தேர்தலைப் போன்றே இத்தேர்தலிலும் பாரிய அளவில் கள்ளவாக்குகளைப் போட்டு, பெட்டி களை நிரப்பி வெல்வதன் மூல மக் கள் ஆதரவு தமக்கு இருக்கின்றது என்ற பொய்த் தோற்றத்தை உரு வாக்க இப்பொழுதே அமைச்சர் குழாம் முயற்சித்து வருகின்றது. அதற்கு ஏற்றபடி படைப்பலம், ஆயுத பலம், பணபலம் எனத் தமது எல் லாப் பலங்களையும் அமைச்சர் தன் கைத்தே கொண்டுள்ளார்.

கடந்த வருடம் மொத்த வாக்கா ளரில் 40 வீதத்தினர் மட்டுமே வாக் களித்தனர் - கள்ளவாக்குக சேர்த்து. அது ஈ.பி.டி.பி.க்குச் மாக அமைந்துவிட்டது. ஆனால் போகின்ற தேர்தலில் ஏனோ தா என்றில்லாமல் முழு வாக்காளர் வாக்களிப்பதன் மூலமே இக் மைப்பானது அதிக ஆசனங்க பெற்றுக்கொள்ளமுடியும் என்பது கள்ளவாக்குகளையும் தடை செ முடியும்.

எனவே டிசெம்பர் 5ஆம் திகதி தேர்தலில், பதிவுசெய்யப்பட்ட முழு வாக்காளர்களும், வாக்களிப்பதன் மூலமே அரசு ஆதரவுக்குழுக்களைத் தோற்கடிக்க முடியும்.

தமிழ் மக்களின் உரிமை நிலைநிறுத்தப்படுவதற்கும், நா மன்றத்துக்கு வலுவான தமிழ் நிதித்துவக்குழுவை அனுப்புவதற் முழு மக்களும் ஊக்கத்துடன் செ பட வேண்டுமெனத் தாழ்மைய வேண்டுகின்றேன் - என்றுள்ளது )

# யுத்தநிறுத்தம் செய்து தீர்வைப் பெற ஐ.தே.கவினாலே மட்டுமே முடியும்!

## நல்லூர்க் கூட்டத்தில் மகேஸ்வரன் உரை

யாழ்ப்பாணம்,நவ.1

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்தம் செய்து, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க எமது கட்சியாலேயே முடியும். மாறாக எந்தத் தமிழ்க் கூட்டமைப்பாலோ, ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளாலோ அது முடியாது.

- இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன். நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் நடைபெற்ற கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் முன்னிலையில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

எமது கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர், ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் எமது அரசுடன் இணைந்து ஆட்சியில் பங்கெடுத்துக் கொள்வதற்காகவே பேச்சு நடத்த வேண்டியிருக்கும்.

### புலிகளால் மட்டுமே விடுதலை கிட்டும்

நாம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுச் சென்றாலும் எமது மக்களுக்கு ஒருபோதும் முழுமையான விடுதலையைப் பெற்றுக் கொடுக்க முடியாது. தமிழீழ விடுதலைப்புலிகளின் வீரமிகு - தீரமிகு - போராட்டத்தால்தான் எமது மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தர முடியும்.

எமது மக்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றக் கதிரைகளுக்குச் செல்பவர்களாலோ அல்லது தமிழ் அரசியல் எம்.பிக்களாலோ தீர்த்து வைக்க முடியாது என்பதை எனது ஒருவருடகால எம்.பி. பதவி அனுபவத்தின் அடிப்படையில் கூற விரும்புகிறேன்.

### நான் ஐ.தே.கட்சியின் உறுப்பினன் அல்லன்

நான் ஐ.தே.கட்சியின் சார்பில் போட்டியிட்டாலும் அந்தக் கட்சியின் ஆதரவாளனோ அல்லது விசுவாசியோ அல்லன். மாறாக எமது மக்களின் அபிலாஷைகளை தீர்க்க ஆசைப்படுகிறேன். இதற்காகவே இந்தப் பேரினவாத அரசியல் கட்சியில் இணைந்து போட்டியிட முடிவு செய்தேன்.

எமது மக்களின் அடிப்படைத் தேவைகளை விரைவாகப் பூர்த்தி செய்ய ஐ.தே.கட்சியாலேயே முடியும். இதைவிட ஐ.தே.கவிடம் எந்தத் தகைமையும் இல்லை.

95ஆம் ஆண்டுக்கு முன்னர் ஐ.தே.க. ஆட்சியில் இருந்தபோதும் யுத்தம் நடந்தது. ஆனால் பொது மக்கள் இப்படிப் பாரிய அளவில் இடம்பெயர்வுகளைச் சந்தித்தார்களா? குடாநாட்டுக்கான தரை வழிப் பாதை மூடப்பட்டதா? இப்படி இறுக்கமான பொருளாதாரத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டதா? சந்திரிகாவின் ஆட்சியிலேயே தமிழ் மக்கள் பாரிய அளவில் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

எமது மக்களுக்கு நிறையப் பிரச்சினைகள் உள்ளன. அவற்றில் பல பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டியவை. அப்பாவி இளைஞர், யுவதிகள் பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் போன்றவற்றின் கீழ் கடந்த எழு வருடங்களாகச் சிறைச்சாலைகளில் வாடுகின்றார்கள்.

மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட பொது மக்கள் வாழும் வன்னிப் பெருநிலப்பரப்பு மீது கடந்த ஏழு வருடகாலமாகப் பொருளாதாரத் தடையை விதித்து மருந்துப் பொருள்களையும், எரிபொருள்களையும் தடுத்து, குடாநாட்டுக்கான தரைவழிப்பாதையையும் மூடிய இந்த அரசுக்கு, ஆதரவு வழங்குகின்ற தமிழ்க்கட்சிக்கா நீங்கள் வாக்குப் போடப்போகின்றீர்கள்?

### அடுத்த ஆறு வருடங்கள் ஐ.தே.க. ஆட்சியே!

இந்தத் தேர்தலில் எமது கட்சி 120க்கும் மேற்பட்ட ஆசனங்களை நாடாளுமன்றில் பெற்று பெரும்பான்மையுடனேயே ஆட்சி அமைக்கும். இந்த வகையில் அடுத்த ஆறு வருடங்களுக்கு ஐ.தே.கட்சியே ஆட்சி நடத்தவுள்ளது.

எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் சிறையில் வாழும் அப்பாவிகளை விடுதலை செய்யவும், வன்னிக்கான பொருளாதாரத் தடையை நீக்கவும் குடாநாட்டுக்குத் தரைவழிப் பாதையைத் திறக்கவும் நான் நடவடிக்கை எடுப்பேன்.

கடந்த தேர்தலில் தீவுப் பகுதியில் ஏராளமான கள்ளவாக்குகள் போடப்பட்டன. வாக்களிப்பு நடப்பதை அவதானிக்கச் சென்ற எமது 19 உறுப்பினர்களையும் 'ஜனநாயகக் கட்சி' கடத்தி வைத்திருந்தது.

கடந்த தேர்தல் பல இக்கட்டான சூழ்நிலைகளில் நடந்து முடிந்தன. இந்த வருடம் குடாநாட்டு மக்கள் தேர்தலை அங்கீகாரம் பெற்ற நிலையில் சந்திக்கின்றார்கள்.

எனவே உங்களின் வாக்குகள் மோசடி செய்யப்படுவதைத் தடுக்க நீங்கள் அனைவரும் தயாராகவேண்டும்.

தென்னிலங்கையில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எல்லோரும் இப்போது உங்கள் முன் வாக்குக் கேட்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் உங்களுக்காக என்ன செய்தார்கள்? இவர்களுக்கெல்லாம் வாக்குக் கேட்க என்ன தகுதி உள்ளது?

இது குறித்து, நீங்கள்தான் சிந்தித்து முடிவெடுக்கவேண்டும். எதிர்வரும் தேர்தலில் எனக்கும் என் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் உங்கள் வாக்குகளைப் போடுவதன் மூலம், சிங்களப் பேரினவாதக் கட்சிக்குள் இருந்துகொண்டே எமது மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்து அவற்றுக்கு உடனடித் தீர்வுகாண எமக்கு அதிகாரம் தாருங்கள் - என்றார்.

பிரசாரக் கூட்டத்தில் ஆசியுரையை நாயன்மார்கட்டு விநாயகர் ஆலய குரு மகாசிவலிங்கக் குருக்கள் நிகழ்த்தினார். ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களான திலகநாயகம் போல், மா.செல்வராசா (சித்தியார்), சி.கணபதிப்பிள்ளை, குலேந்திரராஜா ஆகியோரும் கட்சியின் உறுப்பினர்கள் சார்பில் தநட்சணா மூர்த்தி ஐயரும் உரையாற்றினார்கள். (உ-6)

## கப்பல் தாக்கப்பட்டதை அடுத்து

# எரிபொருள் வாங்குவதற்கு மக்கள் நேற்று முண்டியடிப்பு

எரிபொருளை ஏற்றிவந்த கப்பல் ஒன்று பருத்தித்துறைக் கடற் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து,

யாழ். குடாநாட்டில் உள்ள அநேகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று பொதுமக்கள் முண்டியடித்துக் கொண்டு, நீண்ட வரிசையில் நின்று - எரிபொருள்களை பெற்றுக்கொண்டதைக் காணமுடிந்தது.

இதேவேளை -

பெரும்பாலான, தனியாருக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றுக்காலையிலேயே எரிபொருள் முடிவடைந்துவிட்டதாகக் குறிப்பிடும் பதாதைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

நேற்றுக்காலையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல், மண்ணெண்ணெய் முதலிய எரிபொருள்களை ஏற்றிய நிலையங்கள் நேற்று நண்பகலுடன் தமது விநியோகத்தை நிறுத்திக்கொண்டன. இதனால் சம்பந்தப்பட்ட நிலையங்களுக்குச் சென்ற பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைக் காணமுடிந்தது.

இதுகிடையில் -

நேற்று போயாதினம் என்பதால் எரிபொருளின் கையிருப்பு குறித்து பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையுடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பெறமுடியவில்லை. (ம-7-117-ரி)

## விளக்கில் சுருட்டை பற்றவைத்தவருக் நேர்ந்த கதி!

படுக்கையில் படுத்திருந்தபடியே குப்பி விளக்கில் சுருட்டைப் பற்ற வைத்தவர் விளக்குக் கைதவறி சரிந்து நெஞ்சின் மீது வீழ்ந்ததில் பலத்த எரிகாயங்களுக்கு இலக்கா னார்.

கடந்த இரு தினங்களுக்கு மு னர் புலோலி தெற்கு புற்றளையி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.(க-)

# ஆப்கானில் 4ஆவது வாரமாக தொடரும் அமெரிக்கத் தாக்குதல்

ஆப்கானிஸ்தானில் நான்காவது வாரமாகத் தொடரும் அமெரிக்க வான தாக்குதல்களில் நேற்றுச் சுமார் 100 போர் விமானங்கள், தலிபான் மற்றும் அல்கெய்தா இலக்குகள் மீது சர மாரியாகக் குண்டுகள் வீசின. அதி காலையில் கந்தகார் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டது.

## 7 குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழப்பு!

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக் கத் தாக்குதலில் ஆப்கானியர் ஒரு வர் அவரது 7 பிள்ளைகள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளதை வெளி நாட்டுச் செய்தி நிறுவன செய்தியாளர் ஒருவர் உறுதிப்படுத்தினார். கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்க விமா னம் ஒன்று வீசியகுண்டு, இலக்குத் தவறி வீடொன்றின் மீது விழுந்ததி லேயே இந்த அனர்த்தம இடம்பெற்ற தாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை ஆப்கான் நேரப் படி 7.30 மணியளவில் சக்திவாய்ந்த குண்டு ஒன்று காபூலில் வீழ்ந்து வெடித் ததைக் கேட்கமுடிந்ததாகவும் -


அந்தக் குண்டு குடியிருப்புப் பகுதியில் வீழ்ந்து வெடித்திருக்கும் வாய்ப்பு அதிகமுள்ளதாகவும் -

அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காபூலின் வடக்குப் பகுதியில் நேற்றுப்பகல் நூற்றுக்கணக்கான அடிகள் உயரத்துக்குப் புகை மண்ட லம் எழுந்ததாக நேரில் கண்டவர் கள் தெரிவித்தனர். (ஒ)

# 'குர்ஸ்க்' நீர்மூழ்கி விபத்துக் குறித்து ரஷ்யக் கடற்படையினர் ஆய்வு

நோர்வே அருகே ஆழ்கடலில் சிக்கிய ரஷ்ய அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பலான 'குர்ஸ்க்கை' ரஷ்ய கடற்படை அதிகாரிகள் கடலில் இருந்து மீட்டுள்ளனர். நீர்மூழ்கிக் கப்பலில் இருந்த 'டோர்பிடோ' குண்டொன்று வெடித்ததாலேயே 'குர்ஸ்க்' கடலில் ஆழ்ந்ததாக அவர்கள் தெரிவித்தனர். ஆனால் 'டோர்பிடோ' குண்டு வெடித்ததற்கான காரணத்தை அவர்கள் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை. ரஷ்ய கடற்படைத் தளமான ரோஸ்லை கோவாவில் தற்போது 'குர்ஸ்க்' நீர்மூழ்கிக் கப்பலின் மீட்கப்பட்ட பாகம் ஆராயப்பட்டுவருகிறது.



நீர்மூழ்கிக் கப்பலின் மீட்கப்பட்ட பகுதி



உடைந்து பிளந்த 'குர்ஸ்க்'



'குர்ஸ்க்' நீர்மூழ்கியிலிருந்து தற்போது கண்டெடுக்கப்பட்ட பணி யாளர் ஒருவரின் சடலத்தை வாகனத்தில் ஏற்றும் கடற்படையினர்.




நீர்மூழ்கியிலிருந்து அணுஆயுதம் ஒன்று அப்புறப்படுத்தப்படு கிறது.

## யுத்தத்தால் சீரழிந்துள்ள

# ஆப்கானிஸ்தானின் எதிர்காலத்தில் செல்வாக்குச் செலுத்த விரும்பும் இந்தியா

புதுடில்லி,நவ.1

யுத்தத்தால் சீரழிந்துள்ள ஆப் கானிஸ்தானின் எதிர்காலம் பற்றி முடிவெடுப்பதில் இந்தியா செல்வாக் குச் செலுத்த விரும்புவதாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில்

ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடா பாக, ஐ.நா.பாதுகாப்புச் சபையின் 5 நிரந்தர உறுப்பு நாடுகளின் தலைவர் களுக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் பற்றி முடிவெடுக்க செல்வந்த நாடு களின் அமைப்பான ஜி-8 மற்றும் ஆப்கானிஸ்தானின் அண்டை நாடு களின் மேற்பார்வையில் செயற்படும் சர்வதேச அமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் - அதில் இந்தியா வும் செல்வாக்குச் செலுத்தவிரும்புவ தாகவும் - வாஜ்பாய் தனது கடிதத் தில் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

ஏற்கெனவே உள்ள அமைப்புக் களைக் காட்டிலும் திறன்மிக்கதாக வும், அதிக பிரதிநிதித்துவங்களைக் கொண்டதாகவும் புதிய அமைப்பு இருக்க வேண்டும் என்றும் வாஜ் பாய் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆப்கானில் புதிய அரசொன்று உருவாக்கப்படும் போது தலிபான் களுக்கோ, அதன் ஆதரவாளர் களுக்கோ இடமளிக்கப்படக் கூடா தென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், நேற்றுமுன்தினம், ஆப்கான் விவகாரம் தொடர்பாக பிரதமர் வாஜ்பாய் கூட்டிய அனைத் துக் கட்சிகள் கூட்டத்தில், ஆப்கா னிஸ்தானில் அமெரிக்கா தலைமை யிலான கூட்டுப் படைகள் நடத்தும் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் இறப்பது அதிகரிப்பதற்கும் தாக்கு தல்களின் போது நிவாரண உதவிப் பொருள்கள் பெருமளவில் சேதமாவ தற்கும் கவலை தெரிவிக்கப்பட்டது.

# மேற்காசிய வன்முறைகள் குறித்து அரபாத்திடம் பாப்பரசர் கவலை



வத்திகான்,நவ.1

இஸ்ரேலியர்களுக்கும், பலஸ்தீனர்களுக்கும் இடையே வன்முறைகள் முடிவின்றித் தொடர்வது குறித்து பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப் பர் கவலை தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தன்னைச் சந்தித்த பலஸ் தீனத் தலைவர் யஸீர் அரபாத்திடம் தனது கவலை யைப் பாப்பரசர் பகிர்ந்துகொண்டார்.

இஸ்ரேலியரும், பலஸ்தீனரும் தத்தமது ஆயு தங்களைக் கைவிட்டு, பேச்சுநடத்த வேண்டும் என்றும் பாப்பரசர் அப்போது கோரினார்.

ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள அரபாத், பலஸ் தீனப் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இஸ்ரேலியப் படையினர் முற் றாக வெளியேற வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றார். (ஒ-9)

# பாகிஸ்தானின் அணுஆயுதங்களை எவராலும் தொடக்கூட முடியாது

## அதிபர் பர்வேஷ் முஷாரப் உறுதி

இஸ்லாமாபாத்,நவ.1

பாகிஸ்தானின் அணு ஆயுதங் களை எவரும் தொடமுடியாது. அவை கடுமையான கட்டுப்பாட்டில் உள் ளன.

- இவ்வாறு பாகிஸ்தான் தெரிவித் துள்ளது.

அதிபர் முஷாரப்பின் ஆட்சி கவிழ்க்கப்பட்டால், பாகிஸ்தானின் அணுஆயுதங்கள், ஒஸாமா பின்லேட னின் கைக்குப் போவதைத் தடுக்க அமெரிக்கா ஆயத்தமாகி வருவதாக அமெரிக்கப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டது குறித்தே பாகிஸ்தான் அரசு இவ்வாறு கூறியுள்ளது.

இதேசமயம், பாகிஸ்தானின் அணு ஆயுதங்களைப் பாதுகாக்க அதிபர் பர்வேஷ் முஷாரப் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளதாக அமெரிக்க அரசின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆயினும், மத அடிப்படைவாதி களால், அதிபர் முஷாரப் பதவி நீக கப்பட்டால், பாகிஸ்தானின் அணு ஆயுதங்களை கைப்பற்ற அமெரிக்கா திட்டமிடுவதாக் கூறப்படும் செய்தியை அவர் மறுக்கவுமில்லை; ஒப்புக்



கொள்ளவுமில்லை.

அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளியான இது தொடர்பான செய்தி அணு ஆயுதப் பாதுகாப்பு நடை முறைகளைப் பற்றிய அறியாமையை எடுத்துக் காட்டுவதாக பாகிஸ்தானி யப் பாதுகாப்பு அதிகாரி ஜெனரல் ரஷீத் குஷி கூறினார்.

இதற்கிடையில் பாகிஸ்தானுக்கு பல கோடி டொலர்கள் பொருளாதார உதவி வழங்கும் திட்டத்தை அதி பர் புஷ்ஷின் நிர்வாகம் தயாரித்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# சென்னை நகரில் அ.தி.மு.க.உறுப்பினர் துணை மேயர்

சென்னை,நவ.1

நேற்று நடந்த சென்னை மாநக ராட்சி துணை மேயர் பதவிக்கான தேர்தலில் அ.தி.மு.கவைச் சேர்ந்த கராத்தே தியாகராஜன் வெற்றிபெற்றார்.

தி.மு.க. தலைவர் மு.கருணாநி தியின் மகன் மு.க.ஸ்டாலின் சென்னை நகர மேயராக பதவி வகிக்கும் நிலை யில், அ.தி.மு.கவைச் சேர்ந்தவர் துணை மேயராக தெரிவாகியிருப்ப தால், சென்னை மாநகராட்சி நிர் வாகத்தில் இனிமேல் பலத்த பூசல் நிலவும் என்று கருதப்படுகிறது.

சென்னை மாநகராட்சியில் தற் போது அதி.மு.க. கூட்டணியின் உறுப் பினர்கள் அதிகமாக உள்ளனர் என் பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ஆப்கான் மன்னருக்கு எதிராக பாக். பழங்குடியினர் சூளுரை

இஸ்லாமாபாத்,நவ.1

ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னர் ஜாகிர் ஷாவின் ஆதரவாளர் கள் மற்றும் தூதர்கள் எவரும் பாகிஸ் தானுக்குள் கால்வைத்தால் அவர் களைக் கொல்லப் போவதாக பாகிஸ் தானியப் பழங்குடி இனத்தவர்கள் சூளுரைத்தனர்.

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக் கத் தாக்குதல்களைக் கண்டித்து நேற்றுமுன்தினம் பாகிஸ்தானில் ஆயி ரக்கணக்கான பழங்குடி இனத்தவர் கள் திரண்டு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். அந்தப் பேரணியின முடி விலேயே பழங்குடியினர் ஆப்கான் மன்னருக்கு எதிராகச் சூளுரைத்தனர்.

தலிபான் தலைவர் முல்லா முக மட் ஒமரின் வேண்டுகோளுக்கிணங் கவே இந்த முடிவைத் தாம் எடுத்த தாகப் பழங்குடியினர் தெரிவிததனர்.

பெருமளவு ஆயுதங்களுடன் ஆப் கானிஸ்தானுக்குள் நுழைவதற்கு அனுமதி எதிர்பார்த்து பாகிஸ்தான் எல்லையில் காத்திருக்கும் பழங்குடி யினரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்குப் பாகிஸ்தானின் முக்கிய நெடுஞ்சாலையான 'காரகோர்' வீதியில் இந்தப் பேரணி இடம்பெற்றது.

'காரகோர்' நெடுஞ்சாலையில் தாம் ஏற்படுத்தியிருந்த போக்குவரத் துத் தடைகளை பழங்குடியினர் நீக்கி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இத்தாலியில் தங்கி யுள்ள ஆப்கான் முன்னாள் மன்னர், தலிபான்களை அகற்றிவிட்டு மீண்டும் ஆப்கான் மன்னராக முயற்சித்து வரு கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் தனது படை இருப்பதை அமெரிக்கா ஒப்புக்கொண்டது

வாஷிங்ரன்,நவ.1

ஆப்கானிஸ்தானுக்குள் தனது தரைப் படையினர் நுழைந்துள்ளதை அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.

அமெரிக்க இராணுவத்தினர் வடக்கு ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்து சென்று நிலைகொண்டுள்ள தாகவும் -

அங்கிருந்தபடியே அமெரிக்க விமா னங்களின் குண்டுவீச்சுத் தாக்குத லுககுத் தேவையான தகவல்களை அவர்கள் வழங்கி வருவதாகவும் -

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

தலிபானுக்கு எதிரான தாக்குதல் களில் தரைப்படைகள் ஈடுபடுத்தப்படும் சாத்தியக் கூறுகளையும் அவர் மறுக்க வில்லை.

முன்னதாக, அமெரிக்க கொமாண் டோக்கள் ஹெலிகள்மூலம் ஆப்கா னில் தரையிறங்கி சில மணித்தியா லங்கள் மட்டும் அங்கிருந்துவிட்டுத் திரும்பியதாக அமெரிக்கா தெரிவித் திருந்தது.

அமெரிக்கப் படையினர் ஆப்கா னிஸ்தானிலேயே நிலைகொண்டிருப் பதை அமெரிக்கா ஒப்புக்கொண்டி ருப்பது இதுவே முதல்முறை என்று கூறப்படுகிறது. (ஒ-9)

# பேச்சுக்கு மன்றாட முடியாது என்கிறார் முஷாரப்

இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு நடத்தத் தான் மன்றாடப் போவ தில்லை என்று பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் தெரிவித் தார்.இந்தமாதம் அமெரிக்காவின் நியு யோர்க் நகரில் நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற் றச் செல்லும்போது இரு தலைவர் களும் சந்தித்துப் பேச்சு நடத்துவார் கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.



## சாயீ சிந்தனை

### அமைதியின் இருப்பிடம் இறைவன்

உங்களுக்கு வெற்றி கிட்டுகிறதோ, இல்லையோ நிரந்தரம் தெய்வசிந்தனை செய்து வாருங்கள்! இப்படிப் பழக்கப்படுத்திக் கொள்ளும் போது நீங்கள் ஒரு சமயம் அந்தத் தெய்வீக வடிவத்தை அடைவீர்கள்!

ஆசையால் நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வதால் சத்யஸ்வரூபமாக மாற வாய்ப்புண்டு. முயற்சி செய்யுங்கள். நமக்கு அமைதி வேண்டும். எங்கிருந்து கிடைக்கிறது அமைதி இறைவனைப்பற்றி நினைத்து வருகையில் அமைதி தானாக வந்து சேருகிறது. இவ்வுலகில் எங்கு சென்றாலும் அமைதி என்பது காணப்படுவதில்லை.

யாரைக் கேட்டாலும் I Want Peace, I Want Peace என்கிறார்களே எங்கேயிருக்கிறது (அமைதி) Peace? பிரபஞ்சத்திலிருக்கிறதா? இல்லை வெறும் Pieces தான் காணப்படுகின்றன? அமைதியின் ஒரே இருப்பிடம் இறைவன்தான். அவரே அனைவரையும் படைத்தார். அனைத்து வசதிகளையும் உருவாக்கினார். அவற்றை மனிதன் இஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளும்படி அனுமதித்தார்.

ஆனால் ஒரு நிபந்தனை. நீ எப்படி எண்ணுகிறாயோ (செயல்படுகிறாயோ) அதற்குத் தகுந்த பலனை மட்டும் அனுபவிக்காமல் தப்ப இயலாது என்றார். அது மட்டுமல்ல ஆனந்தம், சாந்தி இரண்டையும் ஆண்டவனே வைத்துக்கொண்டார். எத்தனை விதமாக அனுபவித்தாலும் நமக்கு ஆனந்தம் மட்டும் தேவையாய் இருக்கிறது.

எத்தனை வசதிகள் இருந்தும் சாந்தி என்பது மட்டும் கிடைக்கமாட்டேன் என்கிறது. ஆனந்தம், சாந்தி வேண்டுமெனில் ஆண்டவனை நாடு; இறைவன் மட்டுமே ஆனந்தத்தையும், அமைதியையும் அருள முடியும்.

ஆதாரம்: சனாதன சாரதி 1998 - சித்திரை

## யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு
# வைத்திய நிபுணர் 32 பேர் தேவை
# ஆனால் சேவையில் ஐவர் மட்டுமே!

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 32 வைத்திய நிபுணர்கள் தேவைப்படும் போதும் ஐவர் மட்டுமே அந்தப் பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது என்று யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். வைத்தியசாலையில் 32 சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. இந்தப் பிரிவுகளுக்கென 32 விசேட வைத்திய நிபுணர்கள் கடமையாற்ற வேண்டும். ஆனால் தற்போது பொது வைத்தியம், சத்திரசிகிச்சை, கண் சத்திரசிகிச்சை, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை பிரசவம் ஆகிய ஐந்து சிகிச்சை பிரிவுகளுக்கே விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளனர்.

இவர்களே ஏனைய சிகிச்சைப் பிரிவுகளையும் கவனிக்க வேண்டிய கட்டாய நிலைமையுள்ளது. இதனால் நோயாளர்கள் மட்டுமன்றி வைத்திய நிபுணர்களும் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் கடமையாற்றிவரும் விசேட வைத்திய நிபுணர்கள் யாழ். மாவட்டத்தில் கடமையாற்ற (பல காரணங்களினால்) பின்னிற்பதாலேயே இந்த நிலைமை இருந்து வருவதாகவும், இதனால் இங்கு சிகிச்சைகளுக்கான சகல வசதிகளும் இருந்தும் கூட நோயாளர்கள் கொழும்புக்குச் செல்ல வேண்டி ஏற்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சு180-)

### உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 1

இன்று வியாழக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2.00 மணி முதல் நடைபெறும் உதைபந்தாட்டத்தில் பங்குபற்றும் பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு;-

உரும்பிராய் இந்து எதிர் கொக்குவில் இந்து (16 வயதுப் பிரிவு) புனித ஜேம்ஸ் எதிர் யாழ்.இந்து (16 வயதுப் பிரிவு) புனித யோசப் எதிர் கொக்குவில் இந்து (18 வயது) [ம]

### மேசைப்பந்து சுற்றுப் போட்டி

யாழ். பாடசாலைகளுக்கு இடையில் இன்று நடைபெற இருந்த பெண்கள் பிரிவு மேசைப்பந்து சுற்றுப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

ஆண்கள் மேசைப்பந்துச் சுற்றுப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும் சுண்டுக்குளியில் உள்ள வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (க-10)

### தொல்புரத்தில் நாய்களுக்கு தடுப்பூசி

சண்டிலிப்பாய், நவ. 1

வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் வராது தடுப்பூசி போடும் திட்டத்தின் கீழ் சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் நாளை வெள்ளிக்கிழமை தடுப்பூசி போடப்படவுள்ளது.

இதன் பிரகாரம் தொல்புரம் கிழக்கு முன்கோடையில் காலை 9 மணிக்கும், தொல்புரம் மேற்கு கலைவாணி சனசமூக நிலையத்தில் 11 மணிக்கும், தொல்புரம் மேற்கு செல்வா சனசமூக நிலையத்தில் பகல் ஒரு மணிக்கும், மூளாய் வேரம் சனசமூக நிலையத்தில் பிற்பகல் 2.30 மணிக்கும் தடுப்பூசி போடப்படும் என்று சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வி. சதீஸ் தெரிவித்துள்ளார். (க-135)

### டிறிபேக் கல்லூரி மாணவருக்கு

யாழ்ப்பாணம், நவ. 1

டிறிபேக கல்லூரியில் கல்வி கற்று தற்போது இடம் பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் ஜி. சீ. ஈ உயர்தர வகுப்பு (2002) மாணவர்களை பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக நாளை வெள்ளிக்கிழமைக்குச் முன்னர் கல்லூரி இயங்கும் நிரு கல்வி நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (க)

## உயிரிழந்த கடற் கரும்புலிகள் நால்வரின் பெயர் விவரம்

வவுனியா, நவ. 1

பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் மாலை படையினரின் எரிபொருள் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தில் கடற் கரும்புலிகள் நால்வர் வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ கப்டன் கனி அன்பன் (மயில்வாகனம் ஸ்ரீகாந்த் — யாழ்ப்பாணம்)

★ மேஜர் கடலரசன் அல்லது சமுத்திரன் (தம்பிப்பிள்ளை நவசிவாயம் — மட்டக்களப்பு)

★ மேஜர் கஸ்தூரி (தங்கராஜா சுபாசினி — யாழ்ப்பாணம்)

★ கப்டன் அன்புமலர் அல்லது கேசவி (பொன்ராசா அன்புழகி — யாழ்ப்பாணம்) ஆகியோரே வீரச்சாவடைந்தனர்.

இதேவேளை — நாகர் கோவில் பகுதியில் நேற்று முன்தினம் படையினருடன் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் லெப்டினன்ட் வண்ணன் (கணேஸ்நீதிராசா — அம்பாறை) என்ற போராளி உயிரிழந்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

(ஐ-164)

### நடத்துநர் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ்ப்பாணம் வின்சர் சந்தியில் கடந்த திங்கள் மாலை 5 மணியளவில் மினிவான் — பஸ் விபத்தில் சிக்கி மினிவான் நடத்துநர் படுகாயமடைந்தார்.

பத்தாவத்தை, இளவாலையைச் சேர்ந்த செல்லத்துரை குணரட்ணம் என்பவரே மினிவானுக்கும் பஸ்ஸுக்கும் இடையில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சு-6))

### மல்லாகத்தில் மோ. சைக்கிள் திருட்டு

வலி. வடக்கு, நவ. 1

மதுபானச்சாலையில் நிறுத்திவிட்டுச் சென்ற மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட் கிழமை இரவு மல்லாகம் சந்திக்கு அண்மையாக உள்ள மதுபான நிலையத்திலேயே இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் திருட்டுப் போனதைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று இராணுவத்தினர் அது பற்றி விசாரித்தனர்.

அத்துடன் அப்பகுதியில் உள்ளவர்கள் சிலர் இராணுவத்தினரால் விசாரிக்கப்பட்டும் உள்ளனர்.

சுன்னாகத்தைச் சேர்ந்த க. தவராசா என்பவரே மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்தவர் ஆவார்.

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 1932 — 07 — 02



இறப்பு 1999 — 11 — 01

### அமரர் நீக்கிலஸ் செபமாலை

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

ஐயா!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திர்!
எனவே தான் உம்நினைவில் என்றும்
நாம் தவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி,
உற்றார், உறவினர்கள்.

உரும்பிராய் கிழக்கு. (94090)

## மரண அறிவித்தல்கள்

### கனகரட்ணம் சீவரட்ணம்

(திருத்துநர்)

இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் சிவரட்ணம் அவர்கள் நேற்று (31-10-2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் அன்னலட்சுமியின் அருமை மகனும், சந்தானலட்சுமி, தனலட்சுமி, விஜயலட்சுமி (ஜேர்மனி), மோகனாம்பாள், மீனாம்பாள் (ஜேர்மனி), மதிவதனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாவச்சந்திரன், பரராஜசிங்கம், யோகேந்திரன் (ஜேர்மனி), மகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01-11-2001) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இருபாலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பரராஜசிங்கம் (சுகுணன்)
(மைத்துனர்)

பாடசாலை வீதி,
இருபாலை கிழக்கு,
கோப்பாய். 94111)

### கந்தையா நடராசா

(ஓய்வுபெற்ற புகையிரத சேவை ஊழியர்)

சுன்னாகம் கடவைப்புலத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா 26-10-2001 (வெள்ளிக்கிழமை) அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (ஜேர்மன்), பிறேமாவதி (நெசவு ஆசிரியை - மல்லாவி), மாலினி (ஜேர்மன்), அனுஷாவதி (சுன்னாகம்), வனஜா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகுதந்தையும், சாந்தகுமாரி (ஜேர்மன்), கிருஸ்ண நவரத்தினராசா (விநிதர்-நீர்ப்பாசனத் திணைக்களம் - வவுனிக்குளம்), அமிர்தலிங்கம் (ஜேர்மன்), கந்தசாமி (சுன்னாகம்), லோகேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், அகல்யா, அஜானிகன், அஸ்விக்கா (ஜேர்மன்), யதுஷனா, சுஜேனி, கோசலாஜினி (சுன்னாகம்), மதுஷங்கன், நிவாஷினி (சுவிஸ்) ஆகியோரின் பேரனும், சிவபாக்கியம், தம்பிராசா, இராசரத்தினம், கிட்ணர், சற்குணம் ஆகியோரின் சகோதரனும், பரமேஸ்வரி, இராஜபூபதி, லோகநாதன், இராஜேந்திரம் (இலங்கை மின்சாரசபை-சுன்னாகம்), சரோஜினிதேவி - ஆனந்தராசா (இலங்கை மின்சாரசபை கண்டி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01—11—2001) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கந்தசாமி (மருமகன்)
சுன்னாகம் (கைதடி).

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (94112)

## உதயன்

### மாயாஜாலமா?

"ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் ஈழத்தமிழர் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும். மருந்துத் தட்டுப்பாடு, பொருளாதாரத் தடை, பயண அனுமதிபெறும் முறை ஆகியன நீங்கி யாழ்., வன்னி மக்கள் சுதந்திரமாக வாழும்நிலை ஏற்படும்".

-இவ்வாறு கூறியிருக்கின்றார் ஐ.தே. கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரன்.

"பேரினவாதக் கட்சி அரசின் கீழ் இருந்து கொண்டேதான் பிரச்சினைக்குத தீர்வைக் காணமுடியும். எனவே இதை விடுத்து நாம் தனித்துச் செயற்படுவதன் மூலமோ, கூட்டாகச் சேருவதன் மூலமோ இதனை நிறைவேற்றிவிட முடியாது. காரணம் இரண்டு பேரினவாதக் கட்சிகளுமே தொடர்ந்து ஆட்சியில் இருந்து வந்துள்ளன; ஆட்சியில் இருக்கப்போகின்றன - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்ட மகேஸ்வரன், நாடாளுமன்றத்தில் ஈழத் தமிழர்களுக்காக - அவர்களது உரிமைகளுக்காக - தமிழர்களின் ஏகப் பிரதிநிதி புலிகள் என்பதை வலியுறுத்துவதற்காக - தமிழர் மீதான அடக்குமுறைகளை அம்பலப் படுத்துவதற்காக - நாடாளுமன்றத்தில ஓங்கிக் குரல் எழுப்பினார் என்பது உண்மையே. நாடாளுமன்றத்திலும் வெளியிலும் துடிப்புடன் செயற்பட்டு திறமையான எம்.பி. என்ற தோற்றத்தையும் உருவாக்கினார் என்பதும் வாஸ்தவம்தான்.

ஆனாலும் தமது கட்சி நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்தும்போது 'மந்திரத்தில் மாங்காய் பறிப்பது போல' மக்களுக்கு மாயாஜாலம் காட்ட முயற்சிக்கக்கூடாது.

அவர் கூறும் - அவர் சார்ந்த - ஐ.தே.கட்சி 1977 முதல் 1994வரை 17 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த போதும், இப்போதுள்ள அரசினால் செய்யப்பட்டது போன்ற அடக்குமுறைகள் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடத்தான்பட்டன; வன்னிப் பெருநிலப் பரப்பின் மீது மட்டுமல்ல - யாழ்.குடாநாட்டின் மீதும் கூட - முழு வடமாகாணத்தின் மீதே - பொருளாதாரத் தடை நடைமுறையில் இருக்கத்தான் செய்தது; மருந்துத் தடை முதல் விமானக் குண்டு வீச்சு வரை சகலமும் இடம்பெறத் தவறவில்லை.

எனவே இவை அனைத்தும் சந்திரிகா அரசு மட்டும் செய்ததாகவும், ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்தக் கஷ்டங்கள் எல்லாம் நீங்கிவிடும் என்றும் மேலோட்டமாகக் கூறுவதன் மூலம் மக்கள் மனதை இலகுவாகத் திசை திருப்பிவிடமுடியாது.

முன்னைய ஐ.தே.கட்சி அரசு போலல்லாது ரணில் தலைமையில் அமையக் கூடிய அரசு தமிழர்களின் உரிமைகளை, அபிலாஷைகளை மதித்து நடந்துகொள்ளும் என்றோ - அல்லது ரணில் புதிய பார்வையோடு ஆட்சிக் கட்டில் ஏறத் திட்டமிடுகின்றார், அவரது கையைப் பலப்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு சமாதானத தீர்வு எட்ட வாய்ப்பு ஏற்படும் என்றோ - மகேஸ்வரன் அவர்கள் கூறுவார்களேயானால் - அதனடிப்படையில் பிரசாரம் செய்வாரேயானால் - அதை சில வேளைகளில் மக்கள் ஏற்கக்கூடும்.

அதைவிடுத்து, சிங்களக் கட்சிகளைப் பேரினவாதக் கட்சிகள் என்று கூறிக்கொண்டு, அவர்களுடன் சேர்ந்திருந்துதான் தமிழர் பிரச்சினைக்கு ஏதேனும் சாதிக்க முடியும் என்று அவர் கூறக்கூடாது. இது சரி என்றால், முன்னாள் யாழ்.நகர மேயர் அல்பிரட் துரையப்பாவும், ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சிக்கும் ஆதரவு கொடுத்து அரசியல் நடத்துவோம் என்று கூறும் டக்ளஸ் தேவானந்தாவும் செய்வது அல்லது செய்தது எல்லாமே முற்றிலும் சரியாகிவிடும் என்பதையும் மகேஸ்வரன் மறுக்கக்கூடாது.

ஆட்சிக்கு வரக்கூடிய ஒரு சிங்களக் கட்சிக்குள் இருந்து கொண்டும், தமிழர்களின் உரிமைக்கு - அவர்களது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்துக்கு - அதற்காகத் தம்முயிரைத் தியாகம் செய்யும் சக்திகளுக்கு - சாதகமாக, முழு மூச்சில் செயற்பட்டேன், செயற்படுவேன் என்ற பிரசாரத்தோடு அவர் மக்கள்முன் வருவதே அவருக்கும் நல்லது, தமிழ் இனத்துக்கும் நல்லது - தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையை - கூட்டுணர்வை - வீச்சிப்பதை விடுத்து.

# ஆஸ்பத்திரி சத்திரசிகிச்சை கூடத்தில் குளிரூட்டி பொருத்தும் பணி ஆரம்பம்

## பிரிட்டிஷ் அரசால் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.1

பிரிட்டிஷ் அரசினால், யாழ்.ஆஸ்பத்திரிக்கென, சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட பாரிய குளிரூட்டி (Air - Conditioner) இயந்திரத்தைப் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாலரை இலட்சம் (British Thermol Unit) பிரித்தானிய வெப்ப அலகு (B.T.U.) வலுவுடைய இப்பாரிய இயந்திரம் ஆஸ்பத்திரி சத்திரசிகிச்சைப் பிரிவில் பொருத்துவதற்கென 10 வருடங்களுக்கு முன்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அதனை யாழ்ப்பாணம் எடுத்து வர அனுமதிக்கப்படாததால் அது கொழும்புத் துறைமுகத்தில் தவம் கிடந்தது. பின்னர் கடந்த ஆண்டே கப்பல் மூலம் அது இங்கு எடுத்து வரப்பட்டது.

எடுத்துவரப்பட்டும் சுமார் ஒரு வருடகாலமாக பொருத்தப்படாத நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் சும்மா கிடந்த இவ்வியந்திரம் தற்போது உள்ளூர் பொறியியலாளர்களினால - சுமார் 10 லட்சம் ரூபா செலவில் - பொருத்தப்பட்டுவருகிறது.

கிருமித்தொற்று ஏற்படாதவகையில் முற்றிலும் புதிய காற்றையே குளிர்மைப்படுத்தி உள்வழங்கும் கட்டமைப்புக் கொண்ட இந்த இயந்திரம் ஆஸ்பத்திரியின் அதிமுக்கிய பிரிவான சத்திரசிகிச்சைக் களத்தில் பொருத்தப்பட்டு வருகிறது.

இருவழிப்பாதை அமைப்புடைய இந்த இயந்திரம் வெளியே இருந்து எடுக்கும் காற்றை குளிர்மையடையச் செய்து ஒருவழியால் உள்ளே வழங்கும் அதேவேளையில், உள்ளே உள்ள காற்றை மறுவழி மூலமாக வெளியேற்றிவைக்கிறது. சத்திரசிகிச்சைக்கூடத்தில் இருக்கக்கூடிய கிருமிகள் வெளிச்செல்லும் காற்றுடன வெளியேற்றப்பட்டுவிடும் என்றும் - தொடர்ச்சியாகப் புதிய காற்றே உள்வாங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இது ஏறக்குறைய 40 கிலோ வோல்ட் அம்பியர் அளவு மின்சாரத்தில் இயங்கவைக்க வேண்டிய பாரிய ஓர் இயந்திரமாகும். (ம-15)

## நாட்டு நடப்பு

### பண்பினை பேணும் நாடு

கந்தசஷ்டி விரதம் காத்து
கந்தனை வேண்டி நொந்து
"பிந்து" என்று பெயரும் சூட்டி
பின்னலையும் வெட்டி விட்டு
ஐந்து வயதாகும் போது
ஐந்தே மெழுகும் ஏற்றி
ஐந்தையும் அடித்து நூர்த்து
அனைவரும் கைதட்டிப் பாடி
வந்தவர் படம் பிடித்து நிற்க
வாளாலே கேக்கை வெட்டும்
செந்தமிழ் பண்பைப் பேணும்
சீர் மேவு ஈழநாடு.

- விகடகவி.

# இனப்பிரச்சினை குறித்த தமது நிலையை கட்சிகள் தெளிவுபடுத்த வேண்டும்

கொழும்பு,நவ.1

இனப்பிரச்சினை தொடர்பாக சகல அரசியல் கட்சிகளும் தமது நிலைப்பாடு என்ன என்பதையும் அதற்குத் தீர்வுகாண முன்வைக்கவிருக்கும் யோசனைகளையும் மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று சமாதான ஆதரவுக்குழு (Peace Support Group) கோரிக்கை விடுத்துள்ளது.

ஆட்சி, நெருக்கடிக்கான தீர்வு ஆகிய இரு சவால்கள் குறித்தும் அரசியல் கட்சிகள் தமது நிலைப்பாட்டை முன்வைக்க எதிர்வரும் பொதுத் தேர்தல் சந்தர்ப்பம் அளித்திருப்பதாகவும் சமாதான ஆதரவுக் குழு குறிப்பிட்டுள்ளது.

அது மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேர்தல் தருணத்தில் மக்கள் உணர்வுகளைக் தட்டி விடும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவது கவலையளிக்கும் நடைமுறையாகும் மீண்டும் ஆட்சி அதிகாரத்தினை பெறுவதற்காக இனநெருக்கடி தொடர்பான விடயங்களை அரசியல்வாதிகள் பயன்படுத்தாமல் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இன்றைய தேசிய நெருக்கடிக்குப் பிரதானமான காரணியாக இருப்பது இனப்பிரச்சினை என்றே நாம் கருதுகிறோம்.

இன நெருக்கடியானது சமூக, உள்சார் கட்டமைப்பு அபிவிருத்தி என்பவற்றை கடுமையாகப் பாதிக்கச் செய்து மோசடிகள், குற்றச் செயல்கள் அதிகரிக்க வைத்து, மனிதப் பெறுமானங்களை குரூரத்தன்மை கொண்டதாக மாற்றுகிறது - என்றுளளது. (ம)

# துரையப்பா அரங்க புதைகுழி அகழ்வுக்கு நிபுணர்கள் ஜனவரியில் யாழ்.வருவர்

## யாழ்.நீதிமன்றுக்கு சட்ட வைத்திய அதிகாரி கடிதம்

யாழ்ப்பாணம்,நவ.1

குடாநாட்டில் மனிதப் புதைகுழி இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ள துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் அகழ்வு ஆராச்சிகளை மேற கொள்வதற்காக சட்ட மருத்துவ ஆயவாளர்களையும், ஏனைய நிபுணர்களையும் யாழ்ப்பாணத்திற்கு எதிர்வரும் ஜனவரியில் அழைத்து வருவேன்.

- இவ்வாறு யாழ்.நீதிமன்றத்துக்கு காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரி. டாக்டர் பி.றொகான் றுவான்புர கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக யாழ்.நீதிவான் நீதிமன்றுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

அகழ்வு ஆராச்சிகளின் போது மீட்கப்படும் எலும்புகளையும், மண்ணையும் யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே வைத்து பரிசோதனை செய்வதற்கு ஏதுவாக அவற்றுக்குப் பயன்படுத்தப்படும் மருத்துவ உபகரணங்களையும் குடாநாட்டுக்கு எடுத்து வர தீர்மானித்துள்ளேன்.

இவற்றை எடுத்து வருவதற்கும் போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்வதுவும் யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியையும், பரிசோதனைகளை போதனா வைத்தியசாலையில் மேற்கொள்வதற்கேற்ற ஒழுங்குகளை யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியை மேற்கொண்டு தருமாறும் -

தற்போது மழைகாலம் ஆரம்பித்திருப்பதால் எதிர்வரும் தை மாதத்தில் அகழ்வு வேலைகளை ஆரம்பிப்பதற்கான நாளை நிச்சயிக்குமாறும் - நீதிமன்றுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து -

யாழ்.சட்ட வைத்திய அதிகாரிக்கும் யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் டாக்டர் பி.றொகான் றுவான்புரவின் கடிதத்திற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்குமாறும் -

இது தொடர்பாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் - உத்தரவிட்ட நீதிவான் இ.த.விக்னராஜா, அன்றைய தினம் துரையப்பா விளையாட்டரங்க மனிதப் புதைகுழி அகழ்வு செய்யும் திகதி நீதிமன்றத்தால் நிச்சயிக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார். (க-6)

### புதுப்பொலிவுடன் குருபூசை மடாலயம்

சுழிபுரம் அறுபத்து மூவர் குருபூசை மடாலயம் திருத்தஞ் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுகிறது. (க-28)

## துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியில்

# உடல்வலு பயிற்சிக்கான மண்டபம் அமைப்பது குறித்து நாளை முடிவு?

யாழ்ப்பாணம்,நவ.1

மனிதப் புதைகுழி இருப்பதாகக் கூறப்படும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியில் உடல்வலு பயிற்சி மண்டபம் ஒன்றை அமைப்பதற்குரிய இடத்தைத் தெரிவுசெய்வதற்கும் கட்டடம் அமைக்கலாமா என்பதைத் தீர்மானிப்பதற்குமாக -

யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரி, மேலதிக அரசாங்க அதிபர், யாழ்மாநகரசபை ஆணையாளர், யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரிகள் ஆகியோரை நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு, துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் சமுகமளிக்குமாறு யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியில் புதிய உடல்வலு பயிற்சி மண்டபத்தை அமைப்பதற்கு வடக்கு, கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சு 10லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்திருந்தது.

இந்த நிதியைப் பயன்படுத்தி யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், யாழ். மாநகர சபையின் அங்கீகாரத்துடன் மேற்படி கட்டடத்தை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நிலையில், துரையப்பா விளையாட்டு அரங்கத்திற்கு அருகில் மனித புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு அகழ்வு ஆராய்ச்சி வேலைகள் இடம்பெற்றதால் மேற்படி பிரதேசத்தில் எந்தவித வேலைகளும் இடம்பெறக்கூடாது என்று நீதிமன்றம் மாநகரசபைக்கு கட்டளை பிறப்பித்துள்ளது.

இதன் காரணமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் அந்தப் பகுதியில் உடல்வலு பயிற்சி மண்டபம் அமைக்க முடியாதுள்ளதாக யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த வேலையை ஆரம்பிக்காதுவிட்டால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மீளவும் அமைச்சுக்குச் சென்றுவிடும் என்று நீதிமன்றுக்குச் சுட்டிக்காட்டி, இந்தக் கட்டடத்தைக் கட்ட நீதிமன்றம் அனுமதியளிக்க வேண்டும் என்றும் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் நீதிமன்றுக்கு விண்ணப்பித்திருந்தார்.

இந்த விண்ணப்பம் தொடர்பாகவும், மனிதப் புதைகுழி அகழ்வு வேலைகள் இடம்பெற வேண்டிய இடத்தை நிச்சயமாகத் தெரிவுசெய்ய வேண்டிய பகுதியை அடையாளம் காட்டவும், யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரிக்கே முடியும் என்பதாலும் -

அவரையும் மேலதிக அரசாங்க அதிபரையும் ஏனையவர்களையும் நாளை துரையப்பா விளையாட்டு அரங்கத்திற்கு சமுகமளிக்குமாறு நீதிவான் அழைப்பு விடுத்துள்ளார். (க-6)

### நாளை

ஐப்பசி 16
வெள்ளிக்கிழமை
திதி : பிரதமை
பிற்பகல் 12.27 வரை
நட்சத்திரம் : பரணி
முற்பகல் 10.23 வரை
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 6.04 - 7.34
ராகுகாலம் : 10.34 - 12.04
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தோல்வி சாகாத வருகிறது? தோல்வி அடைந்து விடுவோமோ என்று எண்ணிய பொழுதில்தான்.

# கடற்படை சிப்பாய் உட்பட 10 கைதிகள் தென்பகுதி சிறைகளுக்கு மாற்றம்

## கப்பலில் அழைத்துச் செல்லப்பட்டனர்

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கடற்படைச் சிப்பாய் உட்பட 10 கைதிகள் நேற்று முன்தினம் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

பண்டத்தீவு விதவைப் பெண் பாலியல் வல்லுறவுச் சம்பவ சந்தேக நபரான கடற்படைச் சிப்பாயும் -

நீதிமன்றங்களால் 6 மாதத்துக்கு மேற்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இருவரும் -

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 7கைதிகளுமே, நேற்றுமுன்தினம் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களை அழைத்துச் செல்வதற்காக திருகோணமலை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் 4பேர் அங்கிருந்து வந்திருந்தனர்.

இந்த கைதிகள் அனைவரும் தென பகுதியில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ். சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-6)



கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் காயமடைந்த பொலீஸார் ஒருவருக்கு ஆஸ்பத்திரி ஒன்றில் அவசர சிகிச்சை அளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடை பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

## நாடகப் பிரதியாக்கப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.1

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு யாழ்.திருமறைக் கலாமன்றம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் நாடகப் பிரதியாக்கப் போட்டி ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளது.

நாடக எழுத்தாளர்கள் அனைவரும் கிறிஸ்து பிறப்பை மையமாகக்கொண்டு சமகாலப் பார்வையுடன் 45 நிமிடங்கள் மேடையேற்றப்படக் கூடிய இதுவரை மேடையேற்றப்படாத நாடக ஆக்கத்தை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து தமக்கு அனுப்பிவைக்குமாறும் -

அவற்றில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று நாடக ஆக்கங்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்றும் - யாழ்.திருமறைக்கலாமன்ற பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(க-6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சோமசேகரம் முத்துவேலு

("திருத்தணிகை", கரணவாய் வடக்கு, கரவெட்டி)

எப்போதும் எந்நேரமும் ஒளிமயமான இனியமுகம்!
எங்கள் ஆசை ஐயாவின் அன்பான பேச்சு!
அனைவருக்கும் நன்மை செய்யுமெண்ணம்
உன்போலெவர்க்கிங்கு அமைந்தது பண்பு?

*உமது அண்ணனின் பிள்ளைகள் நாம்*
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*சரசாலை வடக்கு,*
*சரசாலை.*
(93884)
திரு.திருமதி வல்லிபுரமும்
பிள்ளைகளும்.

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு புதிய களஞ்சிய அறைக் கட்டடம்

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.போதனா வைத்தியசாலைக்கென சுகாதார அமைச்சினால் 7 மில்லியன் ரூபா செலவில் புதிய களஞ்சிய அறைக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. விரைவில் இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் பிரதான களஞ்சிய அறைக் கட்டடம் ஒன்று இல்லாமையினால் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியதாகவும் தற்போது புதிதாக களஞ்சிய அறை அமைக்கப்பட்டதால் மருந்துவகைகள், ஏனைய பொருள்களை வசதியாகவும், பாதுகாப்பாகவும் பேண முடியும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-180-15-17)

## ஆறாம் மாத நினைவஞ்சலி

மண்ணில் 20 - 11 - 1964



விண்ணில் 10 - 05 - 2001

### அமரர் இரத்தினம் இரவீந்திரன்

தாயகம் வந்து நீ
தாயுடன் இருப்பேன் என்றாய்!
வானகம் செல்வதற்கு வலிந்து நீ
முயன்றது தான் ஏனோ?
நோயுடன் இருக்கலாகாதென்று
சேயையும் பிரிந்தனையோ?
தாயுடன், தந்தை, தம்பி, தங்கையர்
தவிக்கின்றோம்! துடிக்கின்றோம்!!
வேயுறு தோளி பங்கன் மலரடி
தூயவன் நீ சேர்ந்திருக்க
மாயவனார் மருகன் நல்லூரான் தாள்
பணிந்து நகர்ந்தது ஆறுதிங்கள்!

*தகவல்:-*
*வ.சந்திரன் (மாமன்),*
*55,சிவன் புதுவீதி, நல்லூர்.* (94042)

- நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# அரசாங்க அறிவித்தல்

## தேருநர் பதிவேடுகள் திருத்தம் - 2001

1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்கத் தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12(1)ஆம் பிரிவின் படி 2001 ஆம் ஆண்டுக்குரிய தேருநர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க் காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள். | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள். |
|---|---|
| 2.1 மாவட்டத் தேர்தல் அலுவலகம் | அரசாங்க அதிபர் அம்மாவட்டத்துக்கு பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான தேருநர் பதிவேட்டுப் பிரதி. |
| 2.2 பிரதேச செயலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள தேருநர் பெயர்கள் அடங்கிய பதிவேட்டின் பாகங்கள். |

3) ஏதாவது ஒரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் தேருநர் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் உள்ள தேருநர் பதிவேட்டை அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பாகத்தை பரிசிலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

4) தேருநர் பதிவேட்டை அல்லது அதன் பொருத்தமான பாகத்தை பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும் 2001ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ஆம் திகதி பதினெட்டு அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ஒவ்வொருவரும் அதில் தமது பெயரை கீழ்க்காணும் முறையில் விடுவித்துக் கொள்ளலாம்.

4.1 இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டிருக்கும் இணைப்படிவத்தில் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொருத்தமான தேர்தல் மாவட்டத்தின் பதியும் அலுவலருக்கு தங்கள் பகுதிக் கிராம உத்தியோகத்தர் ஊடாக எழுத்து மூலம் ஒரு விண்ணப்பத்தினைச் செய்யலாம். இதற்கான விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

4.2 பதியப்படுவதற்கான தகைமை பற்றி எல்லாத் தகவல்களையும் கிராம உத்தியோகத்தரினால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேட பத்திரம் எதிலும் கொடுத்தும், கிராம உத்தியோகத்தரினால் கேட்கப்படும் ஏனைய விவரங்களைக் கொடுத்தும், இவ் விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் கையளிக்கவும்.

5) உங்களினால் கையளிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை, உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தர், தனது சிபார்சுடன் பதிவு அலுவலருக்கு அனுப்பி வைப்பார்.

*செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2001.10.10* (C/18622)

**பதிவு அலுவலர்**
**தேர்தல் மாவட்ட இலக்கம் - 10,**
**யாழ்ப்பாணம்.**

## ஒரு தேருநராகப் பதியப்படுவதற்கான விண்ணப்பப்பத்திரம் - 2001

------------------------------ பிரிவு கிராம உத்தியோகத்தர் ஊடாகப் பதியும் அலுவலர், தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்.

------------------------------ஆகிய நான் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராகப் பதிவு செய்துகொள்ள இத்தால் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

2) எனது விண்ணப்பத்தின் சார்பாக கீழ்க்காணும் விவரங்கள் தரப்படுகின்றன.

2.1: முழுப்பெயர்:------------------------------

2.2: முகவரி :------------------------------

------------------------------

2.3 பிறந்த திகதியும் வயதும் :------------------------------

2.4 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ஆம் திகதி மேற்படி முகவரியில் சாதாரண குடியிருப்பாளரா?

------------------------------

2.5 பால் :------------------------------

2.6 இனம்:------------------------------

2.7 பதிவு மூலம் இலங்கைப் பிரஜை ஆயின் பிரஜாவுரிமைப்பத்திர இலக்கத்தைக் குறிப்பிடுக:

------------------------------

2.8 தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டை இலக்கம் :

------------------------------

2.9 கிராம உத்தியோகத்தரின் பிரிவு:------------------------------

------------------------------ ------------------------------
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

### கிராம உத்தியோகத்தரின் அறிக்கை

சிபார்சு செய்யப்படுகிறது/செய்யப்படவில்லை. சிபார்சு செய்வதாயின் பின்வரும் விவரங்களை கிராம உத்தியோகத்தர் பூர்த்தி செய்தல் வேண்டும்.

வாக்கெடுப்புப் பிரிவு:------------------------------

வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்:------------------------------

வீட்டு இலக்கம்:------------------------------

கிராமம்/வீதி:------------------------------

------------------------------
கிராம உத்தியோகத்தரின் கையொப்பமும் பிரிவின் இலக்கமும்

திகதி:------------------------------ (C/18522)

## துயர் பகிர்கின்றோம்



அமரராகிவிட்ட
**சண்முகராசா சிறீஸ்கந்தராசா**
அவர்களுக்கு
கண்ணீர்க் காணிக்கை செலுத்தி, துயருறும் குடும்பத்தினரின் கவலையில் நாமும் பங்குகொள்கின்றோம்.
*ஆத்மா சாந்தி அடைவதாக.*

- திரு.க.தேவகுமாரன் குடும்பம்.

*றெக்ஸ் போட்டோ (REX PHOTO), 606, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P. 3384.* (94103)

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 30 - 03 - 1994



ஆண்டவன் அணைப்பில் 22 - 09 - 2001

செல்வி
### ருணித்தா சிவனேஸ்வரன்

காலஞ்சென்ற எமது மகள் ருணித்தா அவர்களின் 41ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (01-11-2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இநத நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், தபால மூலம் அனுதாபச் செய்தியைத் தெரிவித்தோர் அனைவரும் வந்து கலந்து மதியபோசனத்திலும் பங்குபற்றிச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*"துவாரகை இல்லம்"*
*சோமபுலம் வீதி,*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*
நிரந்தர முகவரி:
*கைதடி குமரநகர், கைதடி.*

*உமது பிரவால் துயருறும்:*
அப்பா சிவனேஸ்வரன் *(லண்டன்),*
அம்மா சுசீமலர்,
அண்ணா தஜீவன், பெரியப்பா குடும்பம்,
ரசி சித்தி குடும்பம் *(லண்டன்),*
சித்தப்பா குடும்பம், அம்மம்மா *(கைதடி),*
அப்பப்பா *(நுணாவில்).*

(94097)

## உள்ளத்தை உருக்கும் 11ஆம் ஆண்டு நினைவலைகள்

*மண்ணில் மலர்வு* 15 - 04 - 1904



*விண்ணில் உறைவு* 30 - 10 - 1990

அமரர்
### வேலாயுதர் சிதம்பரப்பிள்ளை

திதி: ஐப்பசி மாத அபரபட்சத்து பிரதமை 01.11.2001

ஆண்டு பதினொறானாலும் ஆறவில்லை எம் துயரம்
அன்புமழை சொரிந்தெம்மை ஆளாக்கி வைத்தீரே!
அறிவுப்பசி தீர்க்க ஆனமட்டும் பாடுபட்டீர்!
கண்ணியமாய் வாழ்வதற்கு காட்டி வைத்தீர் நல் வழிகள்
காலச் சுழற்சியினால் கணப்பொழுதில் மறைந்தீரே!
கருணைமிக்க உம் வதனம் கானல் நீர் போலாச்சே
கல்விச் செல்வம் மிக்கவராய் காசினியில் ஏற்றிவைத்து
கண்குளிரக் கண்டு களிப்புற்றிருக்கையிலே
பாசச் சுமையோடு பறந்து சென்ற விந்தையென்னே!
பார்புகழும் பண்புகளைப் பரிந்தளித்த அப்பாவே!
ஊன் உடலைவிட்டு ஒளிமயமாய்த் திகழ்ந்தீரோ!
உலகம் ஒரு மாயை என்று உள்ளளவும் சொல்வீரே!
தந்தையெனும் தனித்துவத்தை தரணியிலே நிலைநிறுத்தி
தனிவழியே எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டீர்
நீர்க்குமிழி போன்று நிலையில்லா வாழ்வுதனை
நினைக்கின்ற போது நெஞ்சம் வெடிக்குதையோ!
ஆறாது எம்துயரம் அழியும் உடல் உள்ளவரை
அன்புமயமான அப்பா இது ஆண்டவனின் திருக்கூத்தோ?

*தகவல்: திருமதி இ.சபாரெத்தினம். (மகள்)*
*மந்துவில், கொடிகாமம்.* (94048)

*உங்கள் துயரால் வாடும்:*
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வலிகாமம் வலய அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.1

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 1ஏபி, 1சி, தரம்-2 பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம்-9 பொதுப்பரீட்சை, பாடசாலை மட்டக் கணிப்பீடு உட்பட பல விடயங்கள் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதாக வலயக்கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (ஐ)

## பரிசளிப்பு விழா

வலிகாமம் தெற்கு, நவ.1

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் க.அருணாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விவலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்துகொள்கிறார்.

அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் ஆசியுரை வழங்குவார்.

சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலனும், ஓய்வு பெற்ற தெல்லிப் பழை கல்விக் கோட்ட உதவிக் கலவிப் பணப்பாளர் ஆவ. கணேசலிங்கமும் கலந்துகொள்வர்.

பிரதமவிருந்தினர் பரிசில்களை வழங்குவார்.

(க-152)

## பல்கலையில் நாளை கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம் நடத்தும் மாதாந்த கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் அறிமுக வுரையை யாழ்.பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் பொன்.பூலோகசிங்கம் வழங்குவார். 'நாளை நமதே' எனும் தலைப்பில் சிறப்புரையை முன்னாள் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு வழங்குவார். (க-ரி)

## 'எயிட்ஸ்' விழிப்புணர்வு திரைப்படம்

யாழ்ப்பாணம்,நவ.1

குடாநாட்டில் பரவிவரும் 'எயிட்ஸ்' நோயில் இருந்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் குருநகர் இளைஞர் கழகம் 'தண்டனை' என்னும் குறுந்திரைப் படம் ஒன்றைத் தயாரித்து வெளியிட வுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி மாலை 5 மணிக்கு யாழ்.திருமறைக் கலா மன்ற கலைத்தூது மண்டபத்தில் இத் திரைப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்ப வைபவம் நடைபெறவுள்ளது.

(க-6)

## முதலாம் ஆண்டு பிரிவுத்துயர் அஞ்சலி

பிறப்பு 11 - 06 - 1929



இறப்பு 01 - 11 - 2000

### பேனாட் யேசுதாசன் அரியறட்ணம்

(முன்னாள் உத்தியோகத்தர், இ.போ.ச.)

நீர் நீதியுள்ள நடுவராய் வீற்றிருந்து
என் வழக்கில் எனக்கு நீதி வழங்கினீர்!
பாதுகாக்கும் உம் கேடயத்தை வழங்கி
உமது வலக்கரத்தால் என்னைத் தாங்கிக் கொண்டீர்!

*17/2, சென் ஆன்ஸ் வீதி, பாண்டியன்தாழ்வு.* (94027)

பிரிவின் துயரில் வாடும்: மனைவி, மக்கள், மருமக்கள்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

01-11-2001

HAPPY BIRTHDAY



### ~ செல்வன் அபிஷன் ~

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டியைச் சேர்ந்த
**அன்ரனி பெனடிற் - கிருபாகனி**
தம்பதியினரின் செல்வப் புதல்வன்

### அபிஷன்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (01.11.2001) வியாழக்கிழமை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். அபிஷனை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, உற்றார், உறவினர் அனைவரும் குழந்தை இயேசுவின் அருள்பெற்று, பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
ஐ.மார்க்கண்டன் குடும்பத்தினர்
அம்மப்பா, அம்மம்மா
(ஓய்வுபெற்ற அதிபரும், சமாதான நீதிவானும்)

முகவரி:
*"மதிபதி" மாகியப்பிட்டி,*
*சண்டிலிப்பாய்.* (94059)

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் ஐப்பசித் திங்கள் 17ஆம் நாள் (03.11.2001) சனிக்கிழமை துதியை திதியும் ரோகிணி நட்சத்திரமும், அமிர்த சித்த யோகமும் கூடிய பகல் 10.30 மணிமுதல் 1.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**கிருஷ்ணஜோதி**
*B.Com.(Hons)*
ஆசிரியர், ஹாட்லிக்கல்லூரி
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**ஸ்ரீவாணி**
வணிகபீட இறுதிவருட மாணவி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
அவர்களுக்கும்

பருத்தித்துறை, புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தில் திருமணம் நிகழ சிவனருள்பாலித்துள்ளதால் அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் எமது உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தாங்கள் நல்வரவை நாடும்:**

திரு.திருமதி ப.பாலகிருஷ்ணன்
*"வள்ளியம்மை வாசா"*
*சுப்பர்மடம், பருத்தித்துறை.*

திருமதி வடிவேலு சிவகாமசுந்தரி
*பத்திரகாளி கோயில் வீதி, பருத்தித்துறை.*

(இருவீட்டார் அழைப்பு)

☆ இதனையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும். (94065)

வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

## வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்

ஸ்தாபனத்தாரின்

## மலிவு விற்பனை!

இன்று **1-11-2001** முதல் **14-11-2001** வரை.

**இன்றே விரையுங்கள்:**

*சகலவித புடைவை வகைகளுக்கும் விசேட கழிவு உண்டு.*

**வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்**
176, 258, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (94104)



## கியுமெடிக்கா பிள்ளைகள் இல்லம்

சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.
எமது இலவச வைத்திய சேவை
இலவச நடமாடும் வைத்திய சேவையுடன்

## இலவச பல் வைத்திய சிகிச்சை

இன்று (01-11-2001) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இந்த நிகழ்வு உயர்திரு.து.வைத்திலிங்கம் மேலதிக அரச அதிபர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.
*அனைவரையும் அன்புடன் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.*

*கியுமெடிக்கா நிறுவனம்,*
*பிள்ளைகள் இல்லம்.*
*சங்கரப்பிள்ளை வீதி,*
*மானிப்பாய்.* (94100)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07
-
08
-
1920

மறைவு
11
-
11
-
2000

**அமரர் வைத்திலிங்கம் சரவணமுத்து**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி: 01-11-2001

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

*திருமதி*
*அனுஷா சிவனேஸ்வரன் (மகள்)*
*யாழ். பல்கலைக்கழகம்*
*81, சீனியர் லேன்,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.* (94093)

## கண்ணீர் அஞ்சலி

கிராம உத்தியோகத்தர் திரு.சு.சூரியகுமார்
அவர்களின் அன்புத் தந்தையார்
**கார்த்திகேசு சுந்தர்ராஜா**
(உதவி குடிவரவு ஆணையாளர், சட்டத்தரணி)
அவர்கள் 29-10-2001 இல் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகரும், நலன்புரிச் சங்கமும்,
நல்லூர்.
(94105)

## ஐந்தாண்டு நினைவுகள்



வைய
ஏட்டில்
1935
-
09
-
22

தெய்வ
வீட்டில்
1996
-
10
-
26

**அமரர் சின்னையா சுப்பிரமணியம் (சைவம்)**
(இளைப்பாறிய சாரதி, இ.போ.ச., பருத்தித்துறை)
திதி: 01-11-2001 பூர்வபக்க பிரதமை

*இரவிரவாய்க் கண்விழித்து உங்களின்பம் ஒதுக்கி அன்று*
*கனவினிதாய்க் கண்டீர்கள். நாம் வளர வேண்டுமென்று*
*எங்களது வருங்காலஞ் சிறக்க என்று எத்தனையோ*
*எண்ணமது வைத்தெம்மை வளர்த்தெடுத்த தந்தை நீங்கள்.*
*நீங்கள் பிரிந்து ஐந்தாண்டுகள் கழிந்திட்டாலும்*
*நாம் வாழ்ந்து முடியும்வரை மறப்போமா தங்களை நாம்?*

*சரண்யா மில்,*
*கரணவாய் தெற்கு.* (94108)
தங்கள் நினைவில்....
குடும்பத்தினர்.


# SHOTOKAN KARATE ACADEMY

Affiliated to: International University For Martial Arts
(Universal Thanswa Karate Federation & Japan Shotokan Karate Main Dojo)
Executive President: Prof.Dr.V.Thanarajah, J.P, 9th DAN.
Chief Instructor: Kancho.S.V.Swarnaraja, B.Sc. 9th DAN
Branch Representative; Sensei, D.Anto Dinesh, M.T.Sk, 4th DAN

**28.10.2001இல் நடைபெற்ற யாழ்.மாவட்ட வெற்றிக்கிண்ண கராத்தே சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய S.K.A.கராத்தே வீரர்கள்**

| Grade | Kumite (சண்டைப்போட்டி) | Kata (காட்டா) | |
|---|---|---|---|
| 8th Kyu | T.Reegan | D.Nixsanthan | 1st Place |
| | C.Muraleetharan | - | 3rd Place |
| 7th Kyu | S.Sujeevkanth (Under 17) | - | 1st Place |
| | R.Rodsikan (Under 17) | - | 2nd Place |
| | S.Ramesh (Under 17) | - | 3rd Place |
| | K.Yogapalan (upto 55kg) | R.Rodsikan | 2nd Place |
| | | T.Mohanaraja | 3rd Place |
| 6th Kyu | M.Rasakumar | P.Shantharupan | 1st Place |
| | M.Lathan | T.Vinoth Majuran | 2nd Place |
| 5th & 4th Kyu | S.Steepan Stepat (upto 55kg) | - | 1st Place |
| | P.Thayaparan (upto 55kg) | - | 2nd Place |
| | T.Manorangithan | J.Thavalojan | 3rd Place |
| 3rd, 2nd, 1st Kyu | - | K.J.Sutharshan | 1st Place |
| | N.Sureshkumar | - | 2nd Place |
| DAN Black | - | T.Thushananth | 3rd Place |

கழக ஆசிரியர்களான Sensei.D.Anto Dinesh, M.T.Sk, T.Thushananth, S.Kirupairajah, T.Vishnuthas, N.Sureshkumar மற்றும் கழக மாணவ, மாணவிகள் இவர்களையும், பங்குபற்றிய அனைத்து மாணவர்களையும் வாழ்த்தி மகிழ்கின்றனர்.

*ஆண்கள், பெண்களுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.*

**Shotokan Karate Academy**
No.18/5, Martyn Road, Jaffna. (94102)


# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
# சந்தைகள் / இறைச்சிக் கடைகளுக்கான
# கேள்வி அறிவித்தல் - 2002

**01.** கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: **2001.11.12** பிற்பகல் **2.00** மணிவரை.
**02.** கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: **2001.11.13** நண்பகல் **12.00** மணிவரை.
**03.** கேள்விகள் திறக்கப்படும் திகதி : **2001.11.13** பிற்பகல் **15.00** மணி.
**04.** ஏனைய விவரங்களைத் தலைமையலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப்பணம் (மீளளிக்கப் படாதவை) |
|---|---|---|---|---|
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 1. சத்தியக்காட்டுச் சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | | 281,000/- | 5,000/- | 250/- |
| 2. பல்லசுட்டி சந்தை (தற்காலிக சந்தை கேள்விக்காரர் ஒழுங்கு செய்தல்) | | 6,000/- | 500/- | 250/- |
| 3. தொல்புரம் மத்திய சந்தை | | 30,000/- | 1,000/- | 250/- |
| 4. பொன்னாலை சந்தை (மூளாய்) | | 75,000/- | 1,000/- | 250/- |
| **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 1. மரக்கறிச்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | | 551,000/- | 5,000/- | 250/- |
| 2. மீன் சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | | 171,000/- | 5,000/- | 250/- |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 1. வட்டுக்கோட்டை பொதுச் சந்தை (இறாத்தலடி) | | 16,000/- | 500/- | 250/- |
| 2. சங்கரத்தை தற்காலிக சந்தை | | 73,000/- | 2,000/- | 250/- |
| **அராலி உப அலுவலகம்** | | | | |
| 1. தற்காலிக சந்தை (கேள்விக்காரர் ஒழுங்குசெய்தல்) | | 1,200/- | 200/- | 250/- |
| 2. மீன் சந்தை (அராலி கிழக்கு) | | 2,400/- | 200/- | 250/- |
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 1. மாட்டிறைச்சிக் கடை | 50/- | 15,000/- | 500/- | 250/- |
| 2. கருவாட்டுக் கடை | 50/- | 3,000/- | 500/- | 250/- |
| **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 1. மாட்டிறைச்சிக் கடை | 100/- | 153,000/- | 3,000/- | 250/- |
| 2. ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 11,000/- | 500/- | 250/- |
| 3. கருவாட்டுக் கடை | 75/- | 6,000/- | 500/- | 250/- |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 1. மாட்டிறைச்சிக் கடை | 75/- | 21,000/- | 500/- | 250/- |
| 2. ஆட்டிறைச்சிக் கடை | கேள்விக் காரர் கடை ஒழுங்கு செய்தல் வேண்டும். | 2,000/- | 500/- | 250/- |
| **அராலி உப அலுவலகம்** | | | | |
| 1. மாட்டிறைச்சிக் கடை | | 10,000/- | 500/- | 250/- |

குறிப்பு: கேள்வித் தொகை, கேள்விப் பத்திரப் பணம், மாத வாடகை ஆகியவற்றுக்கு ஜீ.எஸ்.ரீ. வரி 12.5% செலுத்தப்படல் வேண்டும்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
தலைமையலுவலகம்,
சுழிபுரம்.
2001-10-30

ந.திரிலோகநாதன்,
தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

(C-18911)

# பொதுத் தேர்தல் பணிகள் குடாநாட்டில் சூடுபிடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 1

அடுத்த மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் நடவடிக்கைகள் குடாநாட்டில் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் யாழ். நகர வீதிகளில் தமது கட்சியின் அடையாள நிறங்களைக் கொண்ட சரிகைகளைக் கட்டியுள்ளனர். ஆங்காங்கே கட்சிகளின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட பெரியளவிலான பானர்களும், பட்டிகளும் கட்டப்பட்டுள்ளன.

சுவர்கள், மதில்கள் என்பவற்றில் சுவரொட்டிகளை ஒட்டும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளே இன்னும் உரியாமல் கிடப்பதையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

வேட்பாளர்கள் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் திடீரென ஒலிபெருக்கிகளுடன் தோன்றி 'மினி' பிரசாரக் கூட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

ஆலயங்கள் உட்பட கிடைக்கும் மேடைகளில் எல்லாம் அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தமது தேர்தலையொட்டிய கருத்துக்களை வெளியிட்டு வருவதையும் காணமுடிகிறது. சில இடங்களில் பெரியளவிலான பிரசாரக் கூட்டங்களும் நடைபெறுகின்றன. (ம-15)

### சுகாதாரத்தைப் பேணாததால்

# பேக்கரிகள், தேநீர் கடைகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு!

வலி. கிழக்கு, நவ. 1

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில்உரும்பிராய், நீர்வேலிப் பகுதிகளில் உள்ள சுகாதாரம் பேணப்படாத பேக்கரிகள், தேநீர்க் கடைகள் மீது சுகாதாரப் பரிசோதகர் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த மாதம் உரும்பிராய்ப் பகுதியில் ஒரு பேக்கரியும், தேநீர்க்கடையும், நீர்வேலிப் பகுதியில் பேக்கரி ஒன்றும் தேநீர்க்கடை ஒன்றும் அப்பகுதிச் சுகாதாரப் பரிசோதகரால் சுகாதாரம் பேணப்படாத காரணத்தினால் இனங் காணப்பட்டு ஒரு மாத கால (நோட்டீஸ்) வழங்கப்பட்டிருந்தது.

ஆனாலும் குறிப்பிட்ட காலத்தில் கட்டடம்திருத்தங்கள் செய்யப்பட்டு சுகாதாரம் பேணப்படாத காரணத்தினால் கடந்த 29 ஆம் திகதி யாழ்.நீதிமன்றில் சுகாதாரப் பரிசோதகரால் இந்த பேக்கரிகள் மற்றும் கடைகளின் உரிமையாளர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(க - 180)

### நோய் தடுப்பு முறைகள் குறித்து

# குடாநாட்டு மாணவர்களுக்கு அறிவூட்டல் வகுப்புக்கள்!

யாழ்ப்பாணம், நவ.1

நோய்கள் ஏற்படாது தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு அறிவூட்டல் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன

பாடசாலை நாள்களில் புதன்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை காலை பிரார்த்தனையைத் தொடர்ந்து இந்த அறிவூட்டல் வகுப்பு சுமார் 45 நிமிட நேரம் நடைபெற்று வருகின்றது.

இந்த அறிவூட்டல் வகுப்பு குறித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி.கிருஷ்ணசாமி விவரிக்கையில் —

ஆரோக்கியமான சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டுமாயின நோய்கள் வருவதற்கு முன்பு அவற்றைத் தடுப்பதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களையும், மருந்துகளைங் கையாளும் முறைகளையும் சமூகத்துக்குத் தெரியப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

மாணவர்களுக்கு அறிவூட்டப்பட்டால் அவர்களின் மூலம் சமூகம் இந்த அறிவைப்பெற்று ஆரோக்கியமான வாழ்வை வாழலாம் எனும் நோக்கிலேயே இந்த வகுப்புகள் பாடசாலைகள் தோறும் நடத்தப்பட்டு வருகின்றன என்றார். (க-10-ரி)

### தேசிய சேமிப்பு வங்கி யாழ். கிளையில்

# உலக சேமிப்பு தினத்தன்று ரூ. 53 லட்சம் சேமிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 1

உலக சேமிப்பு தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கி குடாநாட்டில் நேற்று நடத்திய விசேட சேவையில் சுமார் 53 லட்சம் ரூபா சேமிப்புக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார்.

இந்தத் தினத்தையொட்டி வங்கியின் தலைமையகம் செய்த ஏற்பாடுகளுக்கமைய யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி மக்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக பிரசாரங்களை மேற்கொண்டதுடன் சேமிப்பு கணக்குகளையும் ஆரம்பித்து வைத்தது.

இச்சேமிப்பு தினத்தை முன்னிட்டு முகாமையாளரிலிருந்து அனைத்துப் பணியாளர்களும் இதற்கென தலைமையகத்தால் வழங்கப்பட்ட விசேட சீருடையை அணிந்து நேற்று பணியில் ஈடுபட்டனர்.

(ம-4-15)

# ஆசிரியர் குறைநிவர்த்தி சேவை தொடர்ந்து நடத்த ஏற்பாடு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், கல்வி வலயங்களுடன் இணைந்து நடத்தும் குறை நிவர்த்தி சேவை மற்றும் சில கல்வி வலயங்களில் நடைபெறவுள்ளன.

பின்வரும் இடங்களில் குறிக்கப்பட்ட தினங்களில் குறை நிவர்த்தி சேவை பிற்பகல் 1.00 மணி முதல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

★ 05 - 11 - 2001 திங்கள்:- வடமராட்சி கல்வி வலயம் உடுப்பிட்டி, மருதங்கேணி கோட்டங்கள்.

★ 06 - 11 - 2001 செவ்வாய்:- பருத்தித்துறைக் கோட்டம்.

★ 07 - 11 - 2001 புதன்:- தென்மராட்சி, பளைக் கோட்டங்கள். (ஐ)

# கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக முல்லைத்தீவு மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ''நாளை நமதே'' என்ற கருப்பொருளில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் முன்னாள் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு கருத்துரையாற்றுவார். இந்தக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-6)

# விசேட கூட்டம்

சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை மற்றும் உடுவில் ஆகிய நான்கு கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த தரம் 9 உள்ள பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 9 பரீட்சை தொடர்பாகவும் கணிப்பீடு தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதால் குறிப்பிட்ட அதிபர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-10)

# கப்பல் தாக்கப்பட்டது குறித்து யாழ். படைத் தரப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 1

பருத்தித்துறைக் கடற்பகுதியில் வைத்து நேற்று முன் தினம் எரிபொருளை ஏற்றி வந்த கப்பல் ஒன்று விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக யாழ். பாதுகாப்பு படைத் தலைமைச் செயலகம் பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு எரிபொருளை ஏற்றிச்சென்ற ''எம்.ரி. துன்சிந்த'' என்ற எண்ணெய்க் கப்பல் மீது விடுதலைப் புலிகள் 2001 ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி மாலை சுமார் 5.30 மணியளவில் தாக்குதலை நடத்தியுள்ளனர். இந்தக் கப்பலில் சுப்பர் டீசல் மற்றும் மண்எண்ணெய், ஒட்டோ டீசல் போன்றவை ஏற்றப்பட்டிருந்தன.

இந்த எரிபொருள்கள் மூலம் யாழ்ப்பாண மக்களே கூடுதலாக நன்மையடைந்தார்கள். யாழ். மக்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஜெனரேட்டரை இயங்க வைப்பதற்கும், போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களுக்குமே இந்த எரிபொருள்கள் கூடுதலாகப் பயன்படுத்தப்படவிருந்தன.

மேலும் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயலின் காரணமாக மின்சாரவசதி இல்லாத பகுதியில் வசிக்கும் மக்களுக்கு விளக்குப் பற்றவைப்பதற்கே மண்எண்ணெய் விநியோகிக்கமுடியாது போய்விடும். இந்தக் கப்பலில் எடுத்துவரப்பட்ட எரிபொருள்கள் யாவும் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தினால் யாழ். மக்களின் நன்மைக்காகவே அனுப்பப்பட்டிருந்தன.

இந்தத் தாக்குதல் காரணமாக எதிர்வரும் நாள்களில் குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அளவு எரிபொருளை விநியோகிக்க முடியாமலும், அதேவேளை மின்சார உற்பத்தி இயந்திரம் மூலம் முறையாக மின்சாரத்தை உற்பத்திசெய்ய முடியாமலும் போகும் என்றும் —

இந்தத் தாக்குதல் காரணமாகப் பாதுகாப்புப் படையினருக்கு எவ்விதத்திலும் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் —

அதேவேளை — எரிபொருள் தேவைப்படும் போது வேறு கப்பல் மூலம் அதனை எடுத்துவர உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் —

யாழ். பாதுகாப்புப் படைத் தலைமைச் செயலகம் அறிவித்துக் கொள்கின்றது.

எனினும் யாழ். மக்களின் சமூக வாழ்க்கையைச் சீர்குலைப்பதே விடுதலைப்புலிகளின் பிரதான நோக்கமாகும்.

— என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

# இளைஞர்களுக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ். நகரப் பகுதியில் உணவகம் ஒன்றிற்குள் புகுந்து தாக்கியதாகச் சந்தேகத்தின் பேரில் யாழ். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களையும் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கன்னாதிட்டிப் பகுதியைச் சேர்ந்த ஜே. ஜெயக்காந்தன் என்பவரை கடந்த 29 ஆம் திகதியில் இருந்தும் ஐ. கண்ணன் என்பவரை நேற்று முதலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து மேற்படி இரு இளைஞர்களும் யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-6)

# அடையாளம் தெரியாதோருக்கு வாக்களித்து அடிமைகளாகிறோம்

### கருத்தரங்கில் உரை

இலங்கையில் சித்தாந்த ரீதியாகப் பார்க்கும்போது தேர்தல் என்பது பிரயோசனம் அற்றதாகவே தெரிகிறது. எமக்கு அடையாளம் தெரியாத யாரோ சிலருக்கு நாம் வாக்களிக்கின்றோம். பின்னர் அவர்களுக்கு அடிமைகளாகி விடுகின்றோம். தேர்தல், தமிழர்களைப் பொறுத்த வரையில் அவர்களை அடிமைப்படுத்திய சாதனம் மட்டுமே.

—இவ்வாறு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முழு நிலா நாள் கருத்தரங்கில கலந்து கொண்டு 'தேர்தலும் சமாதானமும்' என்ற தலைப்பில் உரையாற்றிய புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அ. பி. ஜெயசேகரம் அடிகளார் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்—

வாக்களிக்கும் முறையின் மூலம் சகல மக்களுக்கும் அரசியல் சமத்துவம் கொடுக்கப்படுகிறது. அரசியலைப் பொறுத்தவரையில் வாக்களிக்கும் முறையின் மூலம் சகல இன மக்களும் இங்கு சமத்துவமாகக் கணிக்கப்படுகிறார்கள். இந்தவொரு விடயத்தில் பெரும்பான்மை இனத்துடன் சமத்துவமாக இருக்கும் நாங்கள் சமூக, பொருளாதார தளத்தில் சமத்துவமாக இருக்கின்றோமா என்பது கேள்விக்குரியதே.

சமூகத்தில் தமிழர்கள் — சிங்களவர்கள் என்றும் பெரும்பான்மை—சிறுபான்மை என்றும் வேறுபாடுகள் இருக்கும் போது தேர்தல் இங்கு பிரயோசனமாக இருக்கும ? சித்தாந்த ரீதியாகப் பார்க்கின்றபோது தேர்தல் என்பது பிரயோசனமற்றதாகவே தெரிகிறது. தெரியாதவர்களுக்கு வாக்குகளை இட்டு நாம் அவர்களின் காலடியில் அடிமைகளாகிவிடுகிறோம். தமிழர்களைப் பொறுத்தவரையில் தேர்தலானது அவர்களை அடிமைப்படுத்திய சாதனம் மட்டுமே.

சமூக, பொருளாதார சமத்துவம் இல்லாவிட்டால் அரசியல் ஜனநாயகத்தின் இருப்பு சந்தேகமானது. அதன் நீடிப்பும் சந்தேகமானது தேர்தலானது மக்களை அடிமைகளாக்கும். எமது நிலபுலன்களையும் உரிமைகளையும் தேர்தல் மூலம் இழந்துள்ளோம். யாவற்றுக்கும் தேர்தல்தான் காரணம். ஜனநாயகம் எமக்குப் படுதோல்வி. அதன் அடிநாதமான தேர்தல் எங்கள் வாழ்க்கை அனைத்தையும் சூறையாடியுள்ளது.

சமூக சமத்துவம் இல்லாத ஒரு நாட்டில் வாக்குச் சமத்துவம் என்பது உடைந்து சிதறிவிடும். நாங்களும் அவ்வாறான நிலையில்தான் இருக்கிறோம்.

மேற்குலக ஜனநாயகத்தை பெருமை பேசிக்கொண்டு நாங்களும் ஜனநாயக நாடு என்று பேசிக்கொள்வதில் பலனில்லை. மக்களின் உரிமைகளைப் பறித்துக்கொண்டு மக்கள் உரிமைக்காகக் குரல் கொடுப்போம் எனக் கூறுதல் மற்றும் உயிர்களைப் பறித்துக்கொண்டு கொலைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தல் என்பன ஜனநாயகமாகா. இதன் மூலம் சமாதானம் ஏற்படாது.

உணவு இல்லாதவனுக்குச் சமாதானம் அவனுக்கு உணவு கொடுப்பது தான். நீதி என்பது உரிமைகளை மதிப்பது. உரிமைகளை மதித்து, பகிர்ந்து கொடுத்து வாழும்போது சமாதானம் தானாகவே ஏற்படும்.

மக்கள் சக்தி திரட்டப்பட வேண்டும். எங்கள் விடுதலை முன்னெடுப்புக்கு அரசு உதவி செய்யத் தேவையில்லை. நாங்கள் சிறந்த முன்னெடுப்புகளைச் செய்தால் அவர்களும் அதற்கு வழி விடுவார்கள். கிடைக்காத உரிமைகளுக்குப் போராடுவதே நல்லது. மனிதனாக வாழ நாம் போராடவேண்டும். போராடிப் பெறவேண்டியது தான் உரிமை — என்றார்.

(ம-10-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன் தொட்டிக்குரிய மோட்டர்கள், அழகுப் பொருள்கள், மீன் தொட்டிக்கு அடியில் போடும் வெள்ளைக் கற்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (நண்பகல் 12 மணிக்குப் பின் பார்வையிடலாம்) (94030)

### காணி விற்பனைக்கு

இருபாலை, கோண்டாவில் வீதி - இராஜவீதிச் சந்திக்கு அண்மையில் தற்பொழுது தோட்டச்செய்கையில் உள்ள, வளமான 13¼ பரப்பு செம் மண் காணி விற்பனைக்கு உள்ளது. வீடு கட்டுவதற்கும் உகந்தது. பொ. தெய்வேந்திரன், அஞ்சல் அலுவலகம், கைதடி. அல்லது வீ. சோமசுந்தரம் இராஜவீதிச்சந்தி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (94063)

### புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

பகிரா, சமிரா இன புறொயிலர் குஞ்சுகள் 02-11-2001 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P. 3529, 2867, றெஜிதா மணப்பந்தல் சேவை, நெல்லியடி, கரவெட்டி. (துபால் கந்தோருக்கு முன்பாக) (94037)

SAMEERA, BHAIRAHA புறொயிலர் குஞ்சுகள் 06.11.2001 செவ்வாய்க்கிழமை மிகவும் குறைந்த விலையில் விநியோகிக்கப்படும். பதிவுகள் ஏற்கப்படும். மருந்து வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். வை.சிவகுமார், (கிளின் சொட் அருகில்) யாழ்.பஸ் நிலையம், இல.461, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (94019)

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி.குணபாகன், 1014, கே.கே.எஸ். வீதி (பெரியபுலம் பாடசாலை முன்பாக); இல.4 கொழும்புத்துறை வீதி (சுண்டுக்குளி பாடசாலை அருகில்). பெற்றுக்கொள்ளலாம். T.P. 3353 (94113)

### இறைச்சிக் கோழிகள் தேவை

புறொயிலர் மற்றும் இறைச்சிக் கோழிகள் தேவை. (நல்ல விலை தரப்படும்) தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (94025)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 07.04.1974இல் பிறந்த, சித்திரை நட்சத்திரம், கனடா நிரந்தர பிரஜாவுரிமை உடையவருக்கு A/L படித்த, 25 வயதுக்கு உட்பட்ட, அழகிய மணமகள் தேவை. திருமணம் கொழும்பில் செய்து அழைத்துச் செல்வார். தொடர்பு: விளம்பர இலக்கம் 1384, மே/பா. உதயன். (94080)

### அபூர்வ ஜோதிடம்

சித்தரின் தேவ ரகசிய ஏட்டின் மூலம் தீராத பல ரோகம் குணம் பெறல் அதிர்ஷ்டயோக பலன் அறிதல் சனி, ஞாயிறு 8.30-2.00. ஆடியபாத வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (94101)

### ஜோதிடம்

கம்பியூட்டர் மூலம் ஜாதகங்கள் கணித்து எழுதிக் கொடுக்கப்படும். எண், கிரக பலன்களும், திருமணப் பொருத்தம் என்பன பார்க்கப்படும். தொடர்புகளுக்கு: நா.கந்தையா, மூத்த விநாயகர் கோயில் தெற்கு, ஆனைக்கோட்டை. (94038)

### ஒரு காதலின் கதை

எல்லா வகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இரண்டாவது நாவல் ஒரு கொழும்பு வார மலரில் தொடர்கதையாகப் பிரசுரிக்கப்பட்டது. கதை இலங்கை முழுவதிலும் நடக்கிறது. (94007)

### அறநெறி ஆசிரியருக்கான கருத்தரங்கு

யாழ்மாவட்டத்திலுள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வதிவிடக் கருத்தரங்கு எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதிவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் அறநெறிப்பாடசாலையைச் சேர்ந்த ஒவ்வொரு ஆசிரியரைப் பங்குபற்றுமாறு மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் கேட்டுள்ளார். (க-ரி)

# உள்ளூராட்சி சபைகளுக்கு 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,நவ.1

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கு 2002ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியாக தலா 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளைச் சகல உள்ளூராட்சிச் சபைகளும் உடனடியாக தமக்கு அனுப்பிவைக்க வேண்டுமென யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஸ்ணசாமி கேட்டுள்ளார்.

முன்மொழிவுகளை அனுப்பி வைப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன.

2001ஆம் ஆண்டின் மேற்படி நன்கொடை நிதியாக ஒவ்வொரு சபைகளுக்கும்தலா 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்ட போதும், 2 லட்சத்து 50ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டது.

எனவே தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள பணத்தின் மூலம் இந்த ஆண்டில் இதுவரையும் பூர்த்தியடையாமல் உள்ள வேலைத்திட்டங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-10-185)

## கலந்துரையாடல்

கோப்பாய்,நவ.1

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் இருந்து தெரிவுசெய்யப்பட்டு தலைமைத்துவப் பயிற்சி நெறியில் பங்குபற்றியவர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஜ-72)


## D. சேனாதிராஜா அன் சன்ஸ்

**(LONDON CERTIFIED OPTOMETRIST)**



*கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்குமிடம்.*
*செயற்கைப்பற்கள் கட்டுமிடம்.*
*மிதப்புப்பற்களுக்கு கிளிப் நவீன தொழில்நுட்ப முறையில் பொருத்தி ஆறு மாதங்களில் பற்கள் சீராக்கித் தரப்படும்.*

ரூபா 1500/=க்கு மேல் மூக்குக்கண்ணாடியைக் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு Sun Glass இலவசமாக வழங்கப்படும். மூக்குக்கண்ணாடி விற்பனையில் மேலும் பல சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். அச்சலுகை களை நீங்கள் பெற்றுப் பயன்பெற எமது தனித்துவமான பெயரைப் பார்த்து வாருங்கள். (எமக்கு வேறு கிளைகள் இல்லை)

**DONATE YOUR EYE'S**

*"உங்கள் கண்களைத் தானம் செய்யுங்கள்! உங்களுக்குப் பின் உங்கள் பொன்னான கண்கள் இன்னுமொரு ஜீவனுக்குப் பயன் படட்டும்"*

*இல.18A,பஸ் நிலையம்,*
(பூபாலசிங்கம் புத்தகசாலைப் பக்கமாகவுள்ள பழக்கடைக்கு அருகில்),
*யாழ்ப்பாணம்.*

சே.ஆனந்தராஜா
*உரிமையாளர்.*

(94110)


## துயர் பகிர்கின்றோம்

'கொழும்பு ஸ்ரூடியோ' பெற்ற மைந்தர்களில் ஒருவரும் 1977இல் புகைப்படத் துறையில் காலடி எடுத்துவைத்த எம் இனிய சக தோழர்களில் ஒருவருமாகிய

**அமரர் சண்முகராஜா சற்குணாணந்த ஸ்ரீஸ்கந்தராஜா**
**(போட்டோ ஸ்ரீ)**


*பண்பாலும் அன்பாலும் நெஞ்சங்களை வென்றாய்*
*புரிகின்ற கடமையை உயிரென்று கொண்டாய்*
*புண்ணாகி வாடவே வழிசெய்து விட்டாய்!*

உன்திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தவர்களது துயரில் நாமும் பங்குகொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"றஜீவ் ஸ்ரூடியோ"
திரு.சி.பாலசிங்கம் (பாலன்)
*47/3, பழைய பூங்கா வீதி,*
*கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.*

"விமலா ஸ்ரூடியோ"
திரு.செ.திருலோகச்சந்திரன் (மணி),
*கே.கே.எஸ்.வீதி,*
*கோண்டாவில்.* (94119)

## 31 ஆம் நாள் நினைவுகள்



அமரர்
**அப்பாப்பிள்ளை நவரத்தினம்**
(B.A.லண்டன்)
*(இளைப்பாறிய உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி, வடமாகாணம்)*
இறைவனடியில்: 02.10.2001

**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:**

*மஞ்சத்தடி முருகன் கோயில் வீதி,*
*இணுவில்.* (94121)

சிதம்பரநாதன் குடும்பத்தினர்.

# யாழ்நகரில் இன்று 'ஔசுசல' மருந்து விற்பனை நிலையம் திறப்பு

அரியாலை,நவ.1

அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் ஏக விநியோகத்தரான யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழநகரில் 'ஔசுசல' மருந்து விற்பனை நிலையம் ஒன்றை இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கவுள்ளது.

கே.கே.எஸ். வீதியில் அமைந்திருக்கும் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தின் கீழ் மாடிப்பகுதியில் உள்ள வர்த்தகப் பிரிவில் புதிய மருந்து விற்பனை நிலையத்தை சங்கத் தலைவர் சீ.வி. கே.சிவஞானம் வைபவரீதியாகத் திறந்துவைப்பார்.

'ஔசுசல' விற்பனை நிலையத்தில் குறைந்த விலையில் மருந்துப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் - கிராக்கியான மருந்துகளையும் கூட இங்கு கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (க-17)

## 13ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27 | 26 |
| - | - |
| 09 | 10 |
| - | - |
| 1944 | 1988 |

அமரர்
**கதிரவேற்பிள்ளை நவரட்ணராஜா**
திதி: 01.11.2001

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே!
ஆண்டுகள் பதின்மூன்று கடந்த போதிலும்
எங்கள் வாழ்வும் வளமும் உங்கள் நினைவுகளோடு....!
*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

*34/3, உடையார் லேன்,*
*கந்தர்மடம்.* (C/18921)

-- மனைவி, மக்கள்.

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி இராசரத்தினம் பரமேஸ்வரி**

அவர்கள் 31-10-2001இல் காலமானதையிட்டு மிகவும் துக்கமடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அமரருக்குக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

*ஆத்மா சாந்தியடைவதாக!*

*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (94114)

- அயலவர்கள்.

## மரண அறிவித்தல்

**திருமதி இராசரத்தினம் பரமேஸ்வரி**

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் பரமேஸ்வரி நேற்று (31.10.2001) புதன்கிழமை காலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சின்னப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற நல்லதம்பி இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நல்லதம்பி சிவக்கொழுந்துவின் மருமகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா, பூபதி, அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரியும் கனகாம்பிகை, புனிதவதி, நகுலேஸ்வரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (சுவிஸ்), மனோகரன், ஞானாம்பிகை, லலிதாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினேஸ்வரன், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் கலைச்செல்வி (சுவிஸ்) மகாலட்சுமி, கலைச்செல்வி, விஜயபாலன், தவஈசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரகாசுதன், சைலஜா, சாந்தரூபன், பிரியதர்சினி, கஜந்தன், அபிராம், ஜசிந்தா (சுவிஸ்), கௌசிகன், ஞானபாலன், சசிலன், துஷ்யந்தி, பிருந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கந்தையா, இரத்தினத்தின அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2001) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.50, நாவலடிலேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (94115)

தகவல்:-
இ.மனோகரன்
(மகன்)

# டிசெம்பர் - ஜனவரி காலத்தில் மழை அதிகரிக்கும் சாத்தியம்

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முற்பகுதி தொடக்கம் அடுத்தாண்டு (2002) பெப்ரவரி மாதம் பிற்பகுதி வரை வடகீழ்ப் பருவக் காற்றுடனான கூடிய மழை வீழ்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளதாக திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி வே.புஷ்பநாதன் தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில் தாழமுக்கம், சூறாவளித் தாக்கங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஒக்ரோபர் வரை ஆயிரத்து 151.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி இங்கு பதிவாகியிருக்கிறது.

இது கடந்த ஆண்டு இக்காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

## கொப்பிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.1

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்விபயிலும் வசதியற்ற குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கென ஒருதொகை அப்பியாசக் கொப்பிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மூக்குக் கண்ணாடி நிறுவனமான எஸ்.எம். பெர்னாண்டோ நிறுவனமே இவ்அன்பளிப்பை நேற்று முன்தினம் அப்பாடசாலையில் கையளித்தது.

கடந்த வருடமும் இதேபோன்று அப்பியாசக் கொப்பிகள் அன்பளிப்பாக இப்பாடசாலைக்கு இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டது. (ம-15)

## கோப்பாயில் கலாசாரப் பேரவை அமைப்பு

கோப்பாய்,நவ.1

கோப்பாய் செயலக பிரிவில் இவ்வாண்டுக்கான கலாசாரப் பேரவை கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தின் போது அங்குராப்பணம் செய்யப்பட்டது.

இந்தப் பேரவையில் ஏற்பாட்டில் எதிர்வரும் டிசெம்பரில் 'முத்தமிழ்' விழா கொண்டாடப்படவுள்ளது.

பேரவையின் தலைவராக பிரதேச செயலர் க.கேதீஸ்வரனும், செயலாளராக கலாசார உத்தியோகத்தர் சி.மாலினியும், பொருளாளராக ஓய்வு பெற்ற நீதிமன்றப் பதிவாளர் சு. இராமலிங்கமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஐ-72)

## தாயைக் காக்க சென்ற சிறுவன் கிணற்றில் வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம்,நவ.1

தொட்டியினுள் வழுக்கிவிழுந்த தாயைத் தூக்கச் சென்றவர் கால் வழுக்கி கிணற்றினுள் விழுந்து படுகாயமடைந்தார்.

கோப்பாயில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் 13வயதுச் சிறுவன் ஒருவனே படுகாயமடைந்தார்.

சுயநினைவிழந்த நிலையில் கோப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இவர் ஆஸ்பத்திரி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (ம-15)

## ஜனாதிபதி சந்திரிகா பிரிட்டிஷ் உள்துறை அமைச்சருடன் பேச்சு

கொழும்பு,நவ.1

ஜனாதிபதி சந்திரிகா இன்று பிரிட்டிஷ் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

பிரிட்டனில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தீவிரமடைந்திருப்பதனால் அது தொடர்பாக பிரிட்டிஷ் உள்நாட்டு அமைச்சருக்கு எடுத்துவிளக்குவதற்காகவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

## நேற்று மாலை யாழ். நகரில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ். நகரப் பகுதியை அண்டிய சந்திகளில் பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நேற்று மாலை 4.30 மணியில் இருந்து 6.30 மணிவரை திடீர் - தீவிர சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

யாழ. நகருக்கு வரும் அனைதது வீதிகளிலும் குவிக்கப்பட்ட படையினர், வாகனங்களில் வந்த பொதுமக்களையும் இறக்கி சோதனையிட்டனர். இதனால் நகருக்கு வந்த பொதுமக்கள் பல இடங்களில் இறக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர்.

இதேவேளை -

கன்னாதிட்டிச் சந்தியில் நின்ற மூன்று இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் முகாமுக்கு அழைத்துச் சென்ற படையினர் விசாரணைகளின் பின்னர் அவர்களை விடுவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-6)


## பாராட்டி நன்றி நவில்கின்றோம்

உடுப்பிட்டி வடக்கு மருதங்குள அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான கட்டட நிதிக்கு ஒதுக்கப்பட்ட ஆறு லட்சம் ரூபாவில் மூன்று லட்சம் ரூபாவைத் தந்துதவிய



வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு
மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார, இந்து சமய கலாசார
மாண்புமிகு அமைச்சர்
**K.N. டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



வடமராட்சி E.P.D.P அமைப்பாளர்
உயர்திரு.
**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்)**
அவர்களையும்

வல்வெட்டித்துறை E.P.D.P. அமைப்பாளர்
உயர்திரு.
**ச.யோகராசா**
அவர்களையும்

*பாராட்டி எமது உளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபை,
கெருடாவில்,
தொண்டைமானாறு.
(C/18927)

## பிற்போடப்பட்டுள்ளது

யா/வேம்படி மகளிர் கல்லூரி வணிக மாணவர் மன்ற நிதிக்காக 03.11.2001 சனிக்கிழமை நடத்தப்படவிருந்த கலை நிகழ்வு 04.11.2001 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

வணிக மாணவர் மன்றம்,
யா/வேம்படி மகளிர் கல்லூரி.
(C/18928)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அண்மையில். நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் நாட்டியக் கலைமாணியில் 2nd class upper தரம் பெற்ற எமது ஆசிரியர்களான

**திருமதி சுபாதினி தயாபரன்**
**திருமதி புவனேஸ்வரி வேல்நிதி**
**செல்வி றஜித்தா சின்னத்துரை**

ஆகியோரை மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வு பெற உளமார வாழ்த்துகின்றோம்.

- நுண்கலை மாணவர்கள்.
(94124)

## நியூ ஸ்ரார் ரெயிலறிங்

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் இயங்கிவந்த எமது நிறுவனம் நெல்லியடி முதலாம்குறுக்குத் தெரு, வண்ணமாடம் நிறுவனத்திற்கு அருகில் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

S.கரன்.
(C/18926)


## ஆறாவது மாத நினைவுநாள்

மண்ணில்
05
~
08
~
1970



விண்ணில்
10
~
06
~
2001

ஹொலண்ட் மண்ணில் இறைவனடி சேர்ந்த

அமரர்

### மார்க்கண்டு ஜெயக்குமார்

*மெல்ல விரிந்த புன்னகையும்*
*மேலான அன்பின் இன்மொழியும்*
*கோலமயில் அழகும் கொண்டு நீயும்*
*குலவி வந்த வேளையிலே இரக்கமில்லாமலே*
*அள்ளிச் சென்றான் கொடுங்கோலன்*
*அந்தோ! தவிக்கின்றோம் நாங்களடா!*

*உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.*

இன்று (01.11.2001) வியாழக்கிழமை நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளிலும் எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் வந்து கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தகவல்:*
*வை.மார்க்கண்டு*
*குடும்பத்தினர்,*
*மடத்தடி, சண்டிலிப்பாய்.* (94122)

பிரிவால் வாடுகின்ற:
அப்பா, அம்மா,
சகோதரன், சகோதரி,
பெறாமக்கள், மருமக்கள்.


**ஸ்ரீசெல்வா சினிமா**
யாழ்ப்பாணம்
*தினசரி: 10.30, 2.30 (ப. நே.)*
வெங்கடேஷ், பானுப்பிரியா
மற்றும் பலர் நடித்த
**சத்தியசீலன்**
புதிய வெளியீடு CD பிரதி
(C/18925)

**ராஜா** யாழ்ப்பாணம்
குணால், மோனல், கரண்
மற்றும் பலர் நடித்த
**பார்வை ஒன்றே போதுமே**
*தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)*
*சனி, ஞாயிறு : 10.30, 2.5 (புதிய நேரம்)*
(C/18920)

**நாகம்ஸ்** சுன்னாகம்
*M.G.R., ஜெயலலிதா, நாகேஷ்*
**ஆயிரத்தில் ஒருவன்**
*காட்சிகள்:– 11.00, 2.30 (பு.நே.) (ரீலீஸ்)*
நாளைமுதல்
**நேசம்**
(94075)

**நிறைஞ்சனாஸ்**
சங்கானை
ராம்கி, ரம்யா கிருஷ்ணன்,
விவேக் நடித்த
**பாளையத்து அம்மன்**
(ரீலீஸ்)
தினசரி காட்சிகள்:
11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-18883)


## மரண அறிவித்தல்கள்

### வேலாயுதபிள்ளை சகாதேவன்

மூளாயை சேர்ந்த வேலாயுதபிள்ளை சகாதேவன் நேற்றுமுன்தினம் (30.10.2001) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை பெற்றிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகனும், வசாவிளான் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சாவித்திரி தம்பதியினரின் மூத்த மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், நதானந்தனின் (சுவிஸ்) அன்புத் தந்தையாரும், பத்மாவதியின் அன்பு மாமனாரும், கஜனின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான திருமதி மனோன்மணி சிவசுப்பிரமணியம் சதாசிவம்பிள்ளை, தியாகராஜா, சந்திரசேகரம், சண்முகம், நாகரெத்தினம் மற்றும் சிவபாதசுந்தரம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2001) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பறாளாய் வீதி,*
*சுழிபுரம்.*
தகவல்:
தர்மபாலச்சந்திரன் ராஜேஸ்வரி
(மைத்துனி)

*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.*
*T.P. 074 - 512148.*
வே.சிவபாதசுந்தரம்
(சகோதரன்)
(94123)

### நாகமணி தம்பிராசா

சண்டிலிப்பயைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி தம்பிராசா நேற்று (31.10.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி தெய்வானையின் அன்பு மகனும், இராசமாணிக்கத்தின் அன்புக் கணவரும், ரவி (சுவிஸ்), ரஜனி, தயா (கொழும்பு), ஜெயா, சுயா ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினசிங்கம், உதயா (சுவிஸ்), சாந்தி, கீதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜந்தா, பியூட்டிகா, பியூட்டிஸன், ரவிஜா, நிசாந், டினோசன், நிறூபன், விதுஷன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2001) வியாழக்கிழமை 12.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கெனடி வீதி,*
*நாவாந்துறை.*
தகவல்:
இரத்தினசிங்கம்
(மருமகன்)
(94127)

### தம்பு ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற காணி அதிகாரி, C.O.)

நாவலடி, ஊரிக்காட்டைச் சேர்ந்த தம்பு ஆறுமுகம் நேற்று (31.10.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தம்பு அவர்களின் மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தையா அவர்களின் மருமகனும், கனகரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், பார்வதி (லண்டன்), வசந்தா (ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, திருநெல்வேலி), விஜிதா (கனடா), சிவகுமாரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சச்சிதானந்தம் (லண்டன்), சிங்கராசா (கனடா) ஆகியோரின் மாமனாரும், தவன்யா, தபன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2001) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் மயிலியதனை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*நாவலடி,*
*ஊரிக்காடு,*
*வல்வெட்டித்துறை.*
தகவல்:
சிவகுமாரன்
(மகன்)
(94125)



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் யாழ். கல்வி வலயத்துடன் இணைந்து நடத்திய ஆசிரியர் குறை நிவர்த்தி சேவையின்போது எடுக கப்பட்ட படங்கள் இவை.

இந்த சேவையில் கலந்துகொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம், கணக்காளர் ரீ.துரைசிங்கம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.வரதராஜன், நிர்வாக அதிகாரி என்.நாகராசா, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி, சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம், நல்லூர் கிளைத் தலைவர் எஸ்.ஜெயானந்தன் ஆகியோர் ஆசிரியை ஒருவரின் குறைபாடுகளைக் கேட்பதை முதலாவது படத்தில் காணலாம்.

தங்கள் பிரச்சினைகளை முறையிட்டு பரிகாரம் காண வந்திருந்த ஆசிரியர்களில் ஒரு பகுதியினரை அடுத்த படத்தில் காணலாம். (ஐ)

SALE! SALE! SALE!

தீபாவளியை முன்னிட்டு இன்றுமுதல்
லிங்கம்ஸ் சில்க் ஹவுஸின்
விற்றுத் தீர்த்தல்

☆ சாறி வகைகள்
☆ சூட் வகைகள்
☆ றெடிமேட் ஆடை வகைகள்
☆ சில்க், சற்றின், விமல் சில்க், பெட்லுக், பப்ளின், சீத்தைத் துணிவகைகள்
☆ ரவுசர் மற்றீரியல்
☆ சைனா துவாய் வகைகள்
☆ ரீசேட், சேட் வகைகள்
☆ குஸ்பு செற் பஞ்சாபி
☆ லேடீஸ் பிளவுஸ் வகைகள், ஸ்கேட் வகைகள்
☆ வோயில் சாறி
☆ டெனீம் ரவுசர், சோக்கோ ரவுசர்

என்பன விற்றுத் தீர்க்கப்படவுள்ளன.
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.....!

லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்
18, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(C/18923),

## சொத்து விவரம் கோருகிறார் தேர்தல் ஆணையாளர்

கொழும்பு,நவ.1

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் தமது சொத்து விவரங்களைத் தனக்கு அறிவிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா அறிவித்துள்ளார்.

1975 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சட்ட பிரமாணங்களின்படி பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த மூன்று மாதங்களுக்குள் தமது சொத்து விவரங்களைத் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும்.

இதே சட்டப் பிரமாணங்களின்படி தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குள் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வதற்கு முன்னர் சபாநாயகருக்குத் தமது சொத்துக்கள் பற்றி அறிவிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் மேலும் சொன்னார்.

இதேவேளை -

சொத்துக்களின் விவரங்களை தேர்தல் ஆணையாளருக்கு வழங்குவதற்கு சில வேட்பாளர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இது குறித்துத் தேர்தல் ஆணையாளரிடம் ஆட்சேபனையும் தெரிவித்துள்ளனர். ஆனால சொத்துக்களின் விரைங்களைச் சமர்ப்பிப்பது 17 ஆவது திருத்தச் சட்டத்தின்படி கட்டாயமானது என ஆணையாளர் கூறியிருக்கின்றார். சொத்துகளைச் சமர்ப்பிக்கும் நோக்கம் வெளியிட முடியாது என்றும், இருந்தாலும் ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்காகவே முக்கியமாகச் சொத்துக்களைச் சமர்ப்பிக்கவேண்டுமென அவர் கூறியுள்ளார். (ம-4)

## திருமலையில் தேடுதல்

திருகோணமலைப் பிரதேசத்தில் இரண்டு இடங்களில் நேற்றுக்காலை பொலீஸார் மேற்கொண்ட தேடுதலின் போது மூன்று கிரனேட்டுக்கள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிகவும் சக்தி வாய்ந்த இந்தக் கிரனேட்டுக்கள் இராணுவத்தினரின் முக்கிய நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ம)

புதிய வீடியோ CD வெளியீடுகள்
வெங்கடேஷ், பாஜுப்பிரியா, சௌந்தர்யா நடித்த
☆ சத்தியசீலன்
☆ துணையிருப்பாள் பண்ணாரி
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில்.
(94126)

பிரத்தியேக வகுப்பு
அளவையியல்
S.S. மனோகரன்
துரித மீட்டல்
வினாவிடை வகுப்பு
ஆரம்பம்:-
02.11.2001 Fri. 4 p.m.
அச்சுவேலி ஆஸ்பத்திரி முன்பாக.
(94106)

கணக்கீடு
Mr.BALAVASAN
B.B.A. (F.M.Sp)
A/L 2003
வங்கிக்கணக்கிணக்கக் கூற்று
Sat.,Sun., 10-11
ஆரம்பம்:- 03.11.2001 10.a.m.
BEACON
வெலிங்டன் சந்தியருகில்.
(94107)

# விடுதலைப் புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகின்றோம்.

நிபந்தனையற்ற பேச்சுக்கு கடந்த வருடமே புலிகள் இணங்கினார்கள். ஆனால் இன்னும் அதற்கு அவர்கள் நிபந்தனை போட்டுக் கொண்டே இருக்கின்றார்கள்.

விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய அரசு தயாராக உள்ளபோதிலும் பேச்சுக்கு வருவதற்கு புலிகள் பின்னடித்து வருகின்றனர்.

இரு தரப்பையும் பேச்சுக்கு நெறிப்படுத்துவதில் நோர்வே இன்னும் ஆவலாக உள்ளது. ஆனால் அதன் முயற்சி சற்று வேகம் தணிந்துள்ளது அதற்குக் காரணம் புலிகள். சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவது தொடர்பாகப் பொறுத்திருந்து பார்ப்போம் என்று புலிகள் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். இவர்களின் இந்த விருப்பமில்லாத் தன்மையே பேச்சு முயற்சிகள் அவரோகணிக்கக் காரணம்.

தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு முன் வைக்கும் யோசனைகளை ஏற்கப் புலிகள் தயாராக இல்லை. யுத்தத்தின் மூலம் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கையில் அவர்கள் தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.

- இவ்வாறு ஜனாதிபதி அந்தச் செவ்வியில் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் நான்கு மாத கால யுத்தநிறுத்த அறிவிப்பை விடுத்தபோது அரசு அதனை முற்றாக நிராகரித்தது என்று ஜனாதிபதியின் செவ்வி தொடர்பாக பி.பி.ஸி. வழங்கிய விளக்கவுரையில் தெரிவிக்கப்பட்டது. (உ)

# ஐ.தே.கவுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுடன் பேச்சு நடத்தும் அரசாங்கத்திற்கே எமது ஆதரவு கிடைக்கும். சிங்கள இனவாத கட்சிகளுடன் கூட்டமைப்புப் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்ய வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஐ.தே.கவுக்கு தமிழ் மக்களின் வாக்குகள் சென்றுவிடக்கூடாது என்பதற்காகவே நாம் போட்டியிடுகின்றோம். இரு தேசியக் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்றே நாம் பிரசாரம் செய்கின்றோம் - என்றனர்.

இந்நிலையில் ஐ.தே.முன்னணியுடன் கூட்டமைப்பிற்கு உடன்படிக்கையா என்று கேள்வி எழுப்பிய இரா.சம்பந்தன் அப்படி ஒரு தேவை எமக்கு இல்லை. என்றும் கூறினார். புதிய அரசு உடன் யுத்தத்தை நிறுத்தி, பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும். அப்போதுதான் எமது ஆதரவு அதற்குக் கிடைக்கும் என்று குமரகுருபரன் தெரிவித்தார். ஜே.வி.பியினதும் பொ.ஐ.முவினதும் பொய்ப் பிரசாரத்துக்கு எதிராக கூட்டறிக்கை ஒன்றை கூட்டமைப்பு விரைவில் வெளியிடும் என்றும் அவர் சொன்னார். (ம)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்
வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு 19 - 08 - 1922



உதிர்வு 02 - 10 - 2001

அமரர்
பொன்னம்பலம் சிவஞானசுந்தரம்
(பிரபல புகையிலை வர்த்தகர், மண்டைதீவு)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானிலுறை தெய்வமே!
மாதமோ ஒன்றாகின்றது நம் மனதிலே வேதனையோ விலகவில்லை.
வளமாக வாழ்கின்றோம் ஆனால் வழிசமைத்த நீரோ இங்கில்லை.
விழிகள் தேடும் இடமெல்லாம். உந்தன் விம்பம் தானே தெரிகின்றது.
உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து, உடன்வந்து எமக்கு உதவிய அன்பு உள்ளங்களுக்கும், இறுதிக் கிரியைகளில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் ஏனைய பல வழிகளில் உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று(01-11-2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்ப சகிதம் வந்து கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தலங்காவற் பிள்ளையார் கோயிலடி,
பதிவுகாரர் ஒழுங்கை,
திருநெல்வேலி.
(94044)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



➡ யுத்தத்தின் அவலங்களில் பிழைப்பு நடத்துவோரை வீழ்த்திட....
➡ சமாதானத்துக்கான சர்வதேச ஆதரவைப் பெற்றிட....
ஆதரிப்பீர் தமிழர் கூட்டணியை!
சுரேஷ் பிரேமச்சந்திரன்
தமிழர் விடுதலைக் கூட்டணி
(93901)

சின்னம் X
இலக்கம் 4 X

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.